தமிழரசுக் கட்சித் தலைவரும் தமிழர் கூட்டணி செயலாளர் நாயகமுமாகிய நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் சி.ஐ.டி. அதிகாரிகளால் நான்கு மணி நேரமாக கேட்கப்பட்ட கேள்விகளைப் பற்றியும் அவற்றுக்கு நாவலர் அளித்த பதில்களைப் பற்றியும் அறிந்துகொள்வதில் தமிழ் மக்கள் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளனர். அக்கேள்விகளில்சிலவற்றைப் பற்றியும் அவற்றுக்கு தலைவர் அமிர்தலிங்கம் அளித்த ஆணித்தரமான பதில்களைப் பற்றியும் சுதந்திரன் தனது பிரத்தியேக செய்தியாக இந்த வாரம் வாசகர்களுக்குத் தருகிறது.


சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, வைகாசி 26உ (9-6-74) ஞாயிறு ஜூன் 9 ஜ:அவ்: 17 புத்தகம் 27 இதழ்-41


# தலைவர் அமிர்தலிங்கத்திடம் சி.ஐ.டி. கேட்டது என்ன?

நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் அண்மையில் 4வது மாடியில் விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்பதை கேள்வியுற்றபோது, தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது; தமிழ் இளைஞர்கள் துடி துடிப்படைந்தனர். விசாரணையின் பின்னர் அமிர்தலிங்கம் அவர்கள் வெளியே விடப்பட்டார் என்பதறிந்த பின்னரே கொந்தளித்த தமிழ் உள்ளங்கள் அமைதியடைந்தன.



இது பற்றி திரு. அமிர்தலிங்கத்திடம் நமது நிருபர் கூறியபோது - அவர் வழக்கமான தனது புன்னகையை உதிர்த்தவராய், "விடுதலை இயக்கத்தவர்களாகிய நாம் எந்த ஒரு கட்டத்திலும் எந்த நிலையையும் சந்திக்க தயாராகவேயிருக்கிறோம். வெலிக்கடைக்கு செல்லவும் நான் தயாராக இருப்பதாக எப்போதோ பகிரங்கமாக அறிவித்துவிட்டேன்." என்று கூறினார்.

தலைவர் அமிர்தலிங்கம் ஏறத்தாழ 4 மணி நேரம் 4வது மாடியில் ஏ.எஸ்.பி. திரு. சில்வா அவர்களால் விசாரிக்கப்பட்டார். திரு. அமிர்த

(5ம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஈழத்தின் 'பகத்சிங்' சிவகுமாருக்கு இறுதி அஞ்சலி!

தமிழ் ஈழத்தின் 'பகத்சிங்' என்று தமிழ் இளைஞர்களால் கருதப்பட்டு வந்தவரும் பொலீசாரால் சென்ற சில மாதங்களாக தேடப்பட்டுவந்து வருமான இளைஞர் பொன்னுத்துரை சிவகுமார், பொலீசாரால் சென்றபுதன் கிழமை கைது செய்யப்பட்ட சமயம் தன்னைத்தானே தற்கொலை செய்து கொண்டு வீரமரணத்தை அணைத்துக் கொண்டார் தன் உயிரையேதமிழ்த்தாயின் திருவடிகளில் சமர்ப்பித்த இந்த வீர இளைஞருக்கு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் தம் இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

சிவகுமார் பின்பற்றிவந்ததாக பொலீசாரால் சந்தேகிக்கப்படும் வன்முறைப் போராட்ட முறையை ஏற்காதோரும் அவரது துணிச்சலான தியாகத்துக்கு தலைவணங்கி அஞ்சலி செலுத்துகிறார்கள். — 5ம் பக்கம் பார்க்க

## "சிவகுமாரனின் வீரத்துக்கு தலைவணங்கி நிற்கிறோம்!" — அமிர்

தன்னலம் ஒரு சிறிதுமின்றி நெஞ்சுறுதியுடன் தமிழ் இனத்துக்கு தன்னை அர்ப்பணித்த ஒரு உத்தம தொண்டன் சிவகுமாரன். அகிம்சை மார்க்கத்தில் நம்பிக்கை கொண்ட எம்போன்றோர் அவரது வழியை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவரது உண்மையான தொண்டையும் தியாகத்தையும் மனமாரப் பாராட்டி, மதிப்பிட முடியாத அவரது வீரத்தின் முன் தலைவணங்கி நிற்கிறோம்.'

— இவ்வாறு தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், சிவகுமார் மறைவு குறித்து விடுத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சிவகுமார் மறைவு குறித்து யாழ் குடாநாடு முழுவதும் ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கியுள்ளது. இளைஞர்கள் கண்ணீரும் கம்பலையுமாக காட்சியளிக்கின்றனர்.

பட்டினங்கள், கிராமங்கள் எங்கும் வியாழன், வெள்ளி இருநாட்களும் கடைகள் அடைக்கப்பட்டு கறுப்புக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன; பாடசாலைகள் கல்லூரிகள் அனைத்தையும் மாணவர்கள் பூரணமாக பகிஷ்கரித்தனர் சினிமா படமாளிகைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

தமிழ்த் தியாகி சிவகுமாரனின் பூதவுடலுக்கு தமிழர் கூட்டணித் தலைவர்களும் பல்லாயிரக்கணக்கான பொது மக்களும் கண்ணீரும் கம்பலையுமாக தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

(5-ம்பக்கம் பார்க்க)

## சிறையில் 60 நாட்கள் உண்ணாவிரதமிருந்த விடுதலை வீரர் மரணம்!

சிறையில் 60 நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வந்த விடுதலை வீரர் ஒருவர் மரணமடைந்தார். இச் சம்பவம் இலண்டனில் நடைபெற்றுள்ளது.

பிரிட்டிஷ் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த இந்த இளைஞர் ஓர் ஐயரிஷ்காரர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பேசும் மக்களுக்கு செல்வாவிடுக்கும் வேண்டுகோள்

என் அன்புக்குரிய தமிழ் மக்களே!

கடந்த 27 ஆண்டுகளாக — 1947ம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து — இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சிகளையும் அபிலாஷைகளையும் உரிமை வேட்கையையும் எடுத்தியம்பும் ஏடாக சுதந்திரன் வெளிவந்து தமிழ் சமுதாயத்துக்கு ஆற்றிவரும் பணியை நீங்கள் அறிவீர்கள்! அரசாங்கத்தினாலும், அரசியல் எதிரிகளினாலும் சுதந்திரனுக்கு அவ்வப்போது ஏற்பட்ட இன்னல்களும் இடுக்கண்களும் தமிழ் மக்களாகிய நீங்கள் காட்டிய பேரன்பாலும் ஆதரவாலும் தான் தாளாக்கப்பட்டு — சுதந்திரன் வெற்றி நடை போட்டு வருகிறது.



பத்திரிகைத்தாள் விலை உயர்வினாலும், ஏனைய உற்பத்தி செலவினங்கள் அதிகரிப்பினாலும் இந்நாட்டிலுள்ள ஏனைய பத்திரிகைகளுக்குப் போலவே சுதந்திரனுக்கும் பொருளாதார நெருக்கடியொன்று இப்போது ஏற்பட்டிருக்கிறது. இன்றைய நெருக்கடியிலிருந்து சுதந்திரனை பாதுகாக்கும் பொறுப்பு தமிழ் மக்களாகிய உங்கள் கரங்களிலேயே தங்கியிருக்கிறது.

தங்கள் உரிமைக்கு வாதாட நல்லதோர் நாளேடு இல்லையே என்ற குறை தமிழ் மக்களாகிய உங்களுக்குண்டு என்பதை நானறிவேன். இந்த நிலையில் இருக்கின்ற ஒரேயொரு வார ஏடாகிய சுதந்திரனை நலிவிலிருந்து காக்கும் பொறுப்பு உங்களுடையதே!

எனவே ஒவ்வொரு வாரமும் சுதந்திரனை வாங்குவதை தமிழ் சமுதாயத்துக்கு ஆற்றும் புனித கடமையாக கொள்ளுங்கள்! சுதந்திரன் வாங்கும் ஒவ்வொருவரும் மேலும் குறைந்தது பத்துப்பேரையாவது சுதந்திரனின் சந்தாதாரர் ஆக்குங்கள்! சுதந்திரன் வளர்ச்சிக்கு எல்லா வழிகளிலும் கைகொடுங்கள்!

ஏனெனில் சுதந்திரன் ஈழத்தமிழனின் இலட்சிய மூச்சு!

இங்ஙனம்—

சா. ஜே. வே. செல்வநாயகம்.

## உணர்ச்சிக் கவிஞரின் சிறை வாழ்வு இரண்டாண்டு நிறைவு

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையில் தள்ளப்பட்டு இத் திங்கள் 10ம் நாளுடன் இரண்டு ஆண்டுகள் முடிவடைகின்றன.



கடந்த 1972ம் ஆண்டு ஜூன் திங்கள் 10ம் நாள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கவிஞர் காசி ஆனந்தன் நீதி விசாரணையோ விடுதலையோ இன்றி வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது தமிழ் மக்கள் அறிந்ததே.

# கூட்டணியின் ஆலோசனைக்கு ஆக்கமான சில திட்டங்கள்!

வித்துவான்
**வ. கந்தையா**

கூட்டணித் தலைவர்கள் மீது தமிழ் மக்கள் அசையாத நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நம்பிக்கையைத் தலைவர்கள் சிதறடிக்கக்கூடாது. சொல்லிலும், அறிக்கைகளிலும் பார்க்கச் செயலே இன்று எமக்குவேண்டியது.

அம்பாறைப் பிரதேசத் தமிழ் மக்கள் வகுப்புக் கலவரத்தாற் பாதிக்கப்பட்ட நிலையைக் கண்டறிய அமரர் வன்னியசிங்கம் அவர்கள் அம்பாறை சென்றார்; நிலைமையை நேரிற் கண்டார். திரும்பி யாழ்ப்பாணம் வந்தார்; மூன்றுவது நாள் உணவு, உடை முதலியன வற்றுடன் லொறிகள் அம்பாறை நோக்கி விரைந்தன. எந்தப்பத்திரிகைக்கும் அம்மகான் அறிக்கைவிடவில்லை. தொண்டர்களுடன் தாமே முன்னின்று தண்டினார். தலைவர்களுக்கு அமையவேண்டிய அருங்குணம். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளைச் செயலிற் காட்டினார்.

"பொது மக்கள் தந்த உணவை உண்டு, மக்கள் தந்த ஆடையை உடுத்து, அவர்களது குடிசைகளிலே வாழ்ந்து, முழுநேர ஊழியர்களாக, சங்கிலித்தொடர் போல, எமக்கும் மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியதால் ஆட்சியைப் பிடித்தோமே தவிர அடுக்கு மொழியாலல்ல' என அறிஞர் அண்ணா அவர்கள் கூறிய வார்த்தைகளாலமைந்த செயற்றிறன் நிறைந்த உண்மைகளை நாமனைவருஞ் சிந்திக்கவேண்டும்.

லட்சோப லட்சம் யூத மக்களை நச்சுப்புகை ஊட்டிக் கொன்று குவித்தும், தூக்கு மேடையேற்றியும், சுட்டுத் தள்ளியும் ஆனந்தத்தாண்டவமாடிய சாத்தான் கிட்லரின் கொடுங்கோன்மை கண்டு அன்றைய யூதஇனம் அஞ்சி நடுங்கி அடிபணிந்திருந்தால், இன்றைய உலகின் கவனத்தைத் தன்பால் இழுக்கக் கூடிய பேராற்றலைப் பெறவோ, இஸ்ரேல் என்ற பாலைவனத்தைப் பசுந்தரையாக்கி வாழவோ, விஞ்ஞானத்தின் விந்தைகளை உலகறிய வைக்கவோ முடியுமா?

சுதந்திர ஆர்வமும், விவேகமும் மட்டுமல்ல, பொருளாதாரத்திலும் நிறைந்த சக்தி பெற்றமையினாலே தான் பூரண சுதந்திர நாடாக இஸ்ரேல் விளங்குகின்றது; பொருளாதார அவசியத்தை 1961 சத்தியாக்கிரகத்தின் போது குறுக்கிட்ட ஆட்சியாளரின் அர்சித் தடையின்போது நாம் அறிந்து கொள்ள முடிந்தது.

நமது இனத்தின் மத்தியில் தலைவிரித்துக்கோரதாண்டவமாடும் நிலைகளைச் சிந்தனைக்கு எடுத்து அவற்றினுக்குப் பரிகாரங் காண வேண்டாமா? வாலிப சமுதாயத்தின் நிலைமையோ பயங்கரமான நிலையிலுள்ளது. சோர்ந்த உள்ளத்தோடு, விரக்தி மனப்பான்மையுடன், வாழ்வில் நம்பிக்கை இழந்து, சிந்தனைகளைச் சிதறடித்து, செல்லுந் திசை தெரியாது நெறிகெட்டு, நிலையின்றி அவர்கள் வாழ்கின்றனர். இன்றைய வாலிபர்கள் எதிர்காலத் தலைவர்கள் என்பதையும்

## தலைவர்களும் பொதுக்குழு உறுப்பினர்களும் முழுநேர ஊழியர்களாக மாறவேண்டும்!

எதிர்கால சமுதாயத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் மூலகர்த்தாக்கள் இன்றைய வாலிபர்கள் என்பதையும், உணர்ந்து தளர்ந்த நிலை போக்கி, உறுதிகொண்ட நெஞ்சுரத்தோடு வாலிப சமுதாயத்தை அமைக்க வேண்டியோர் யார்?

வாழ வழியின்றி, நேரக் கஞ்சிக்கே இயல்பற்று, துன்பங்களின் மத்தியில் துவண்டு துடிக்கும் ஏழைகளைப் பார்த்து ஆறுதல் மொழியாவது கூறும் கடப்பாடு யாருடையது? விவசாயமெனவும், உணவுற்பத்திப்போரெனவும் முழக்கமிடும் இக்காலத்தே தமிழ்ப் பிரதேச விவசாயிகள் படுந்துன்பங்களுக்கு விடிவு காணவும், தமிழர் போராட்ட நிலைக்கு உயிர் நாடியான விவசாயிகளுக்குப் புத்தாக்கம் அளித்து புத்துணர்வோடு அவர்கள் செயற்படவும் வைக்க வேண்டியோர் யார்?

தீண்டாமைக்குச் சாவு மணி அடிப்போம், ஒன்றே குலமாக புதியதோர் உலகஞ் சமைப்போமென ஆரம்பகாலத்திருந்தே, முழங்கி வந்தோம். ஆனால் இன்று அதுபற்றிக் கனவு காணும் நிலைகூட இல்லையே?

இவ்வாறே மொழி நிலை, கல்வி நிலை, வியாபாரம், தொழில் நிலை, குடியேற்றம், உத்தியோகம் முதலிய எத்துறையை எடுத்துக்கொண்டாலும் விமோசனமற்ற நம்பிக்கையிழந்த அழிவு நிலைக்கே நாம் வெகுவேகத்துடன் ஆட்சியாளரால் தள்ளப்பட்டு வருகின்றோம்.

இவ்வித துன்பகரமான கால உச்சக்கட்டத்திலும் கூட மேடை முழக்கமும், "கஞ்சிவரதப்பா" என்ற பத்திரிகை அறிக்கையும் விமோசனத்தைத் தரமாட்டா. அல்லது 70ம் ஆண்டில் ஒரு கறுப்புக்கொடி, 71ல் ஒரு சட்ட மறுப்பு 72ல் ஒரு உண்ணாவிரதம், 73ல் கடையடைப்பு 74ல் சுவர்ச் சுலோகமும் விடுதலையைத் தரமாட்டாது.

25 ஆண்டுக் கால அனுபவத்தின் பின், ஆட்சியாளரின் சுயரூபத்தைத் திட்டவட்டமாக அறிந்தபின், எமது இயக்கத்தின் கொள்கையை மாற்றி அமைத்த பின்னரும் ஆமை வேகச் செயற்பாடு, பேரவை நம்பிக்கை இன அழிவை மிக விரைவில் ஆக்கி வைக்கும். இந்த அழிவு நிலையிலிருந்து இனம் தப்பிப் பிழைத்து உரிமை பெற்று வாழ வேண்டுமெனில் சில அடிப்படையான பணிகளை ஆற்ற வேண்டும்:

### தொகுதிக்கு 10,000 உறுப்பினர்

தொகுதிக்குப் பத்தாயிரம் அங்கத்தவர் என்ற அடிப்படையில் அங்கத்தவர்களைச் சேர்த்தல், கிளைகளையும், மாவட்டக் கிளைகளையும் நிறுவுதல், தொகுதிகள் தோறும் சிறு குடிசைக் கைத்தொழில் நிலையங்களையும் பெருந்தொழில் நிலையங்களையும் பணப் படைத்தோர் ஆதரவுடன் அமைத்தல், விவசாய ஊக்கம், குடியேற்றத் திட்டங்களைப் பயன்படுத்துதல், குடியேற்றத் திட்டங்களில் வாழும் மக்களோடு தொடர்பு கொள்வது, பலம் பொருள் உற்பத்தி நிலையங்களை அமைத்தல், வியாபார நிறுவனங்களை அமைத்து விற்பனவு வசதிகளை பரந்த அளவில் நடைமுறைப்படுத்துதல் போன்ற சில விடயங்களிலாவது நாம் செயற்பட வேண்டும்.

### சுதந்திரன் கருத்தரங்கம்

விடுதலை இயக்கத்தின் அச்சாணி நாளேடு என்பதையும் நாம் ஆணித்தரமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

கருத்தரங்குகள், பட்டிமன்றம், குழுக்கூட்டம் முதலியவற்றாலும் எமது லட்சியத்தை வளர்க்க வேண்டும். மாதர் அணி திரட்டப்பட்டுக் கிராமப் புனருத்தாரண வேலைகளில் ஈடுபடச் செய்தல் வேண்டும். தீண்டாமை ஒழிப்புக்கான ஆக்க வேலைகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

### மூன்று மாதம் முழுநேரம் ஊழியம்

எமது போராட்ட ஆரம்ப வேலைகளில் மிகக் குறைந்த இக் கடமைகள் செயற்பட வேண்டுமேல் கூட்டணித் தலைவர்கள் செயற்குழு, பொதுச்சபை உறுப்பினர்கள் முதலியோர் மூன்றே மூன்று மாதங்களுக்குத் தம்மை முழுநேர ஊழியர்களாக அர்ப்பணிக்க வேண்டும். தேர்தற் காலங்களில் 5, 6 மாதங்களாக ஊண் உறக்கமற்று வாக்கு வேட்டையாடும் எமது தலைவர்கள் — தமிழ் சமுதாயத்தின் உண்மையான சுதந்திரத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள தலைவர்கள்—இச் சிறுகால வெல்லையை மனமகிழ்வோடு ஏற்று தகுதியான திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தயங்க மாட்டார்கள்.

இரண்டு மாத அவகாசத்தின் பின் அதாவது ஆனி, ஆடி ஆகிய இருமாதங்களிலும் தமக்கிருக்கும் முக்கிய வேலைகளை முடித்துக் கொண்டு ஆவணி, புரட்டாசி ஐப்பசி ஆய மூன்று மாதங்களிலும் முழு நேர ஊழியம் புரிந்து இன விடுதலை இயக்கத்தின் திட்டங்களைச் சிந்தித்துச் செயற்படுத்துதல் வேண்டும்.

கூட்டணிச் செயற் குழுவில் இது தீர்மானமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் பொறுப்பினைப் பொது மக்கள் செய்தல் வேண்டும்.

அகிம்சைப் போராட்டமே எமது திட்டவட்டமான கொள்கையாதலின் அமைப்பு முறைகளை எமது தலைவர்கள் அரணாகத்திறம்பட அமைக்க வேண்டும்.

"எல்லாப் பொருளு
முடைத்தாயிடத்துதவு
நல்லாளுடைய தரண்"

என வையம் வாழ வழி வகுத்த வண்டமிழ் வள்ளல் வள்ளுவப் பெருந்தகையின் கொள்கைகளை நன்குணர்ந்த எமது தலைவர்கள் இச் சிறு பணியை ஆற்றுவதன் மூலம் பெருந்தியாகத்தைச் செய்த கடமை வீரர்களாவார்கள்.

அகில உலகிலும் ஐந்தாம் படையும், காட்டிக்கொடுப்போரும், கூட்டிவிட்டுக் காரியமாற்றுவோரையும் வரலாறு தருகிறது. இந்திய சுதந்திரப்போராட்டம் நடைபெற்றபோது ஜமீன்தார்கள், மிட்டாதார், மிராசுதார், பன்னீர்ச் செல்வங்கள் பிரிட்டிசாரின் அடிவருடிகளாகுனர்களே! இந்தியா சுதந்திரமடையவில்லையா?

எண்ணிய வெண்ணியாங்
கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்.

இவ்வேண்டுகோள் தனி நபர் ஒருவருடையதல்ல. உண்மையான விடுதலைக்காகத் தம் வாழ்விழந்து தவிக்கும், விடுதலை உள்ளங்கொண்ட பலரது சிந்தனையின் முடிவாகும்!

## வாசகர் நறுக்கு

அன்புள்ள ஆசிரியருக்கு:-

சுதந்திரன், சுதந்திரமாக வெளிவரவேண்டும். ஈழம் வாழ் தமிழ் எழுச்சி கொண்ட மக்களின் கைகளில் என்றென்றும் இலயமாய்த் திகழ்ந்திடவேண்டும். ஈழத் தமிழ் மக்கள் பற்றிய உண்மையான செய்திகளை அச்சமின்றி வெளியிடுவதில் சுதந்திரனுக்கு நிகராக வேறு பத்திரிகைகள் எதுவும் இல்லை; எனவே இன்பத்தமிழ் இளைஞர் என்றென்றும் உனைக்காப்பர் சுதந்திரனே! என்ன விலையானாலும் அதைக் கொடுத்து வாங்கிடுவோம். உனைக்காக்க நாமிருக்கிறோம்.

—கே. சிவஞெளியாதம்.
அச்சுவேலி.

●

அதிகரித்துவரும் விலைவாசிகளாலும் மற்றும் பொருளாதாரக் கஷ்டங்களாலும் தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு சுதந்திரன் பத்திரிகையை வெளியிடுவதை நாங்கள் நன்கு உணருகின்றோம். இலட்சிய மூச்சு உடையவர்கள் என்றும் தம் இலட்சியக் கனவை நனவாக்கு முயற்சிப்பார்களே தவிரசோர்ந்துபோகமாட்டார்கள். இலட்சிய வாசகர்களாகிய நாம் விலை அதிகரித்தாலும் எங்கள் இதயக்குரலான சுதந்திரனை வாங்கிப் படிப்போம்; ஆதரவு தருவோம்என்பதை தங்களுக்கு உறுதியுடன் தெரிவிக்க விரும்புகிறோம்!

—பண்டையூர்க் காந்தன்.
பண்டத்தரிப்பு.

●

இன்று எங்கள் நாட்டில் தரமான, தகைமையான பத்திரிகையாக — பத்திரிகா தர்மத்துக்கு அமைவாக வெளிவரும் பத்திரிகை சுதந்திரன் ஒன்றுதான் என்று சொல்வதில் அதன் வாசகர் என்றமுறையில் பெருமையடைகிறேன், தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு என்றபடி, தமிழைக் காப்பாற்றவும், அதன் இனிமையை மேலும் ஒருபடி உயர்த்தவும், நாளாந்தம் உலகெலாம் பணியாற்றும் ஒரு பத்திரிகை உண்டென்றால் அது சுதந்திரன் பத்திரிகைதான் என்று அறுதியிட்டுக் கூறுகிறோம்.

விலை உயர்த்தப்பட்டாலும் அழகிய காகிதத்தில் அருமையான செய்திகளுடன் வெளிவந்து தமிழ் சமுதாயத்துக்கு தன்னையே அர்ப்பணிக்கும் சுதந்திரனை தமிழ் மக்கள் என்றும் ஏற்றுக்கொள்வர்.

சுதந்திரன் வாங்க ஒரு ரூபா வாரத்துக்கு செலவிட வேண்டி வந்தாலும், அதற்காக நாங்கள் முணுமுணுக்கமாட்டோம்!

—த. சண்முகலிங்கம்.
இரான்குளம்;

## 'உலகத்தமிழர் குரல்' மலர்ந்தது!

அனைத்துலக தமிழ்ப் பண்பாட்டுக்கழகநிறுவனர்களில் ஒருவரும் தமிழ் தொண்டருமாகிய சுரும்பசிட்டி—இரா. கனகரத்தினம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு 'உலகத்தமிழர் குரல்' எனும் இதழ் மலர்ந்துள்ளது;

உலகெங்கும் வாழும் தமிழர்களை தமிழர்களாக வாழ வைக்க உழைக்க வேண்டுமென்ற இலட்சிய முனைப்புடன் தொடங்கப்பட்ட இவ்விதழில் தென்னாபிரிக்க திருக்குறள் கழகத் தினரின் செய்தி, தமிழர் வாழும் "நீயூனியன்" தீவு பற்றிய மணியனின் கட்டுரை ஆகியன இடம் பெற்றுள்ளன.

சிறிய அளவில் இந்த தமிழ்த்தொண்டு அன்பர் திரு. கனகரத்தினத்தால் தொடங்கப்பட்டாலும், அவருக்கு மேலும் மேலும் கை கொடுத்து வளர்க்க வேண்டியது தமிழர் கடமையாகும். தனிப்பிரதி விலை சதம் 25, கிடைக்குமிடம். 130, திருகோணமலை வீதி, கண்டி, இலங்கை.




# 18. பொலனறுவையில் அகத்தியன் சிலை!

இலங்கை வாழ் தமிழ் மக்கள் இன்றைக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே பெரும்பான்மையினராக வாழ்ந்து, — இவ்விருமாகாணங்களையுமே தங்கள் பூர்வீக பாரம்பரியத் தாயகமாக ஏற்றுக்கொண்டிருந்தாலும் — இலங்கை முழுவதுமே ஒரு காலத்தில் தமிழர்களின் நாடாக விளங்கி வந்திருக்கிறது; வடக்கே பருத்தித்துறை தொடக்கம் தெற்கே தேவேந்திர முனைவரை, கிழக்கே பட்டிப்பளை தொடக்கம் மேற்கே சிலாபம் புத்தளம் வரை தமிழர்களின் கொற்றம் இருந்திருக்கிறது; என்பதை யெல்லாம் ஆங்காங்கே காணப்படும் கல்வெட்டுக்களும், சிலைகளும் சிற்பங்களும், கோவில்களும் ஊர்களுக்கு அமைந்துள்ள பெயர்களும் அசைக்க முடியா ஆதாரங்களாக இன்றைக்கும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன.

சிங்களவர்களின் மூதாதையென்று மகாவம்சமே கூறும் விஜயன் இந்நாட்டில் நுழையுமுன்னரே இங்கு தமிழர்கள் தனியாட்சி நடத்தி தமிழ் நாகரிகத்தை காத்துவந்திருக்கின்றனர் என்பதையும், மகாவலி கங்கைக்கரையோரம் திராவிட நாகரிகமே செல்வாக்குபெற்றிருந்தது என்பதையும் உறுதிப்படுத்தும் பல்வேறு கல்வெட்டுள் தமிழர்களுக்கும் இந்நாட்டுக்குமுள்ள மிகத் தொன்மையான தொடர்பை உறுதிப் படுத்துவதாக உள்ளன. இந்த உண்மையை எவ்வித பாரபட்சமான கண்ணோட்டமுமின்றி நடுநிலை நின்று ஆராயும் வெளிநாட்டு ஆராய்ச்சி அறிஞர்கள் தங்கள் நூல்களில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

இன்று சிங்கள பௌத்த ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கும் கதிர்காமம் ஒரு காலத்தில் தமிழ இந்துக்களின் ஆதிக்கத்திலேயே இருந்தது என்பதற்கும் தமிழர்களின் செல்வாக்கு அங்கு அபரிமிதமாக இருந்ததென்பதற்கும் கதிர்காமத்திற்கு அணித்தாக உள்ள ஊர் ஒன்றுக்கு 'தஞ்சை நகரம்' என்று பெயர் இருப்பதே தக்க சான்றாகும்.

இதே போல பொலனறுவை, இன்று சிங்கள பிரதேசமாக மாறியிருந்தாலும் அது தமிழர்கள் ஆட்சி நடத்திய ராஜதானி என்பதும், சோழ மன்னர்கள் அங்கு சிவாலயங்களை அமைத்து தமிழ்ப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் வளர்த்து வந்தனர் என்பதையும் அங்கு காணப்படும் கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம்.

தமிழர்கள் தங்கள் வரலாற்றை முறையாக எழுதி வைக்காத பெரிய தவறு காரணமாக — இந்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கு மிடையேயிருந்துவரும் தொன்மைத்தொடர்பை அறிய கல்வெட்டு புதை பொருள், சிலைகள், ஊர்ப் பெயர்கள் போன்றவையே நமக்கு பெரிதும் துணைபுரிகின்றன.

இதே நேரத்தில், இங்கு கண்டெடுக்கப்படும் புதைபொருள்களையும் கல்வெட்டுக்களையும் பற்றி, நடுநிலை காண்டு பாரபட்சமின்றி ஆராய்கின்ற தன்மையை அறவே இழந்துவிட்ட சிங்கள ஆராய்ச்சியாளர்கள் சிலர் (ஏன் சிங்களவருக்கு கால்கைபிடிக்கும் ஒரு சில தமிழரும் கூட) உண்மையை அப்படியே சொன்னால் அது சிங்கள இனத்திற்கு பாதகமாகவும் தமிழ் இனத்திற்கு சாதகமாகவும் எங்கே அமைந்து விடுமோ என்கிற அச்சத்தில் — தங்கள் மனச்சாட்சிக்கு முரணாக — கல்வெட்டுக்கள் கூறும் வரலாற்று உண்மைகளை அப்படியே மூடி மறைத்து— அவற்றுக்கு புதிய வியாக்கியானங்களை — சிங்கள இனத்துக்கு செயற்கைப் பெருமை தேடும் வியாக்கியானங்களை —அருவறியே மூன் நின்றார்கள்; முன்நிற்கிறார்கள். இத்தகைய இன அடிப்படையிலான பாரபட்சக்கண்ணோட்டம் நிறைந்த ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை மறுத்து, உண்மையை நிலைநாட்ட தமிழ் ஆராய்ச்சியாளர்கள் முன்வருதல் மிகவும் அவசியம்! அப்போதுதான் முறையான வரலாறு எழுதி வைத்திடத்தவறிய தமிழினம்—ஓரளவுக்கு தனது பழைய வரலாறுகளை உணர்ந்து — புதிய எழுச்சிபெற முடியும்!

ஈழத்தமிழர்கள் பெருமையடையத்தக்க வகையிலும் -ஈழத்துக்கும் தமிழர்களுக்குமிடையேயுள்ள தொன்மையான தொடர்பை வெளிப்படுத்தும் வகையிலும் — சிங்கள ஆராய்ச்சியாளர் ஒருவரின் முடிவை மறுத்தும்— உலகத்தமிழ் மாநாட்டில் படிக்கப் பட்ட ஒரு கட்டுரை சகலராலும் பாராட்டும்படியாக அமைந்திருந்தது.

பொலனறுவை தமிழர்கள் ஆண்ட பூமி—தமிழர்களின் செல்வாக்குப்பெற்றுத் திகழ்ந்த மண் — அங்குள்ள கல்வெட்டுக்களும் சிலைகளும் தமிழர் ஆண்டதைக் கூறும் அருமையான வரலாற்று ஆதாரங்கள் — என்பதையெல்லாம் தம்முடைய அழுத்தமான ஆராய்ச்சிக் கட்டுரையில் எடுத்துக் கூறி, தமிழர்களுக்கு மதிப்பெழுச்சியூட்டிய அந்த 'வெளிநாட்டுக்காரரை' ஒருபோதும் மறக்க முடியாது!

என்ன? வெளிநாட்டுக்காரர் என்றா கூறினேன்? தப்பு ... தப்பு! அவரையும் ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி யென்றே பலர் நினைத்துக்கொண்டார்கள்! செக்கச் சிவந்தமேனியும், குறுந்தாடியும் மிடுக்கான நடையும் கொண்ட அந்தக் கிழவரை யாரோ ஒரு வெளிநாட்டுக்காரர் என்றே மக்கள் பலர் கருதினார்கள்; மக்கள் என்ன? என் மனைவியே கூட அக்கிழவரைச் சுட்டிக்காட்டி அவர் எந்த நாட்டுக்காரர் என்று கேட்கவே செய்தாள்.

'கிழவர்' என்றாலும் அந்த மனிதருக்கு கோபம் வந்துவிடும். ஏனெனில் உடலால் கிழவரானாலும்—உள்ளத்தாலும் தமிழ் உணர்ச்சியாலும் இருபது வயது இளைஞர் அவர்.

தமிழர் தந்தை செல்வா அவர்களுக்கு தமிழ் மாநாட்டுக்கு அழைப்பு அனுப்பக் கூடாது என்று சில தறுதலைகள் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைக்கூட்டத்தில் துள்ளியடித்தபோது —குமுறிக் கொதித்தெழுந்து 'செல்வநாயகத்துக்கு அழைப்பு இல்லாமல் என்ன தமிழ் மாநாடு?' என்று கர்ச்சித்த சிங்கம் அல்லவா அவர்!

ஆம் அவர்தான், ஆராய்ச்சி அறிஞர் ஜேம்ஸ். டி. இரத்தினம் அவர்கள்; பொலனறுவையிலுள்ள மிகப் பழைய சிலையைப் பற்றியே (இன்று பராக்கிரமபாகுவின் சிலையென்று கூறப்படும் சிலைபற்றி) அவரது ஆராய்ச்சிக் கட்டுரை அமைந்திருந்தது:

சிங்கள ஆராய்ச்சியாளரான டாக்டர் பரணவிதானாவின் முடிவுகளை தாக்கித் தகர்த்தெறிந்து — பொலனறுவையிலுள்ளகுறித்தசிலை தமிழ்முனிவர் அகத்தியமுனிவருடையதேஎன்பதைவெளிநாட்டு, உள்நாட்டு ஆராய்ச்சியாளர்களின் மேற்கோள்களுடன் நிரூபிக்கும் கட்டுரையாக ஜேம்ஸ் இரத்தினம் அவர்களுடைய கட்டுரை அமைந்திருந்தது:




'பொலனறுவையில் காணப்படும் சிலை, சிங்கள இதிகாசமாகிய சூளவம்சத்திற் கூறப்படும் 12ம் நூற்றாண்டு சிங்கள அரசன் பராக்கிரம பாகுவின் சிலையென்று முதற்கூறிய டாக்டர் பரணவிதாரண, பின்னர் 1971ம் ஆண்டு தம்முடைய முந்திய ஆராய்ச்சியை மறுத்து — அண்மையில் தாம் வாசித்த ஓர் ஆவணத்தின்படி பொலனறுவைச் சிலை முதலாம் விஜயபாகுவினுடையதே (1055—1110) என்கிற முடிவுக்கு வந்ததாக கூறியிருந்தார். அந்த ஆவணம் விரைவில் வெளியிடப்படும் என்றும் அப்போது கூறியிருந்தார். துரதிஷ்டவசமாக பரணவிதான இறந்துவிட்டார்: அவர் கூறியிருந்தபடி அவர் குறிப்பிட்ட ஆவணம் இனி வெளி வருமோ வராதோ என்பதையும் எம்மால் அறிய முடியவில்லை!

—என்று தமது கட்டுரையை தொடங்கிய திரு: ஜேம்ஸ் இரத்தினம் 'ஆவணங்கள்' என்று கூறப்படும் ஆதாரங்களைக்கொண்டு இத்தகைய முடிவு எடுக்கப் படுவதை அறிஞர்கள் ஏற்கெனவே நிராகரித்திருக்கிறார்கள் என்பதையும், டாக்டர் ஆர். ஏ. எல். டி. குணவர்த்தன அவர்கள். 'பரணவிதானவின் ஆராய்ச்சி முடிவுகள் நம்பிக்கையற்ற ஆதாரங்களின் மீதே கட்டியெழுப்பப்படுகின்றன' என்று ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருப்பதையும் தம்முடைய கருத்துக்கு ஆதாரமாக எடுத்துரைத்தார்.

பொலனறுவையிலுள்ள சிலை முதலாவது பராக்கிரமபாகுவினுடையது'(1153—1186)என்று இப்போதுவழக்கில் கொள்ளப்பட்டாலும். இதற்கு ஆதாரமுமில்லை; இம்முடிவு உறுதிப்படுத்தப்படவுமில்லை!

என்று சுட்டிக் காட்டிய திரு. ஜேம்ஸ் இரத்தினம் பொலனறுவையின் பழம் தமிழ்ப் பெயர் ஜனநாதபுரம் என்பதை எடுத்துக் காட்டினார்.

புலஸ்தி நகரம் என்பதே பொலனறுவையின் பாளி மொழிப்பெயராகும். கி. பி. முதலாம் நூற்றாண்டுக் காலத்திய சிறிய குகைக் கல்வெட்டு ஒன்றைக்கொண்டு பொலனறுவையின் அப்போதைய பெயர் ஜனநாதபுரம் என்பதையும். 11ம் நூற்றாண்டுவரை இலங்கை முழுவதும் பரவியிருந்த சோழ சாம்ராச்சியத்தின் மாகாணத் தலைநகராக ஜனநாதபுரமே அமைந்திருந்தது என்பதையும் அறிய முடிகிறது 1055—1111 வரை ஆண்ட முதலாம் விஜயபாகு மன்னனே அதன் பெயரை விஜயராஜபுர என மாற்றியமைத்தான். 11, 12ம் நூற்றாண்டு கல்வெட்டுக்களின்படி, ஜனநாதபுரம் விஜயராஜபுர ஆகிய பெயர்களுக்கு மாற்றுப்பெயராக புலனரி எனும் தமிழ் சொல்லும் கையாளப்பட்டு வந்ததை அறிய முடிகிறது!



ஜேம்ஸ் இரத்தினம்

இங்குள்ள இரண்டாவது சிவன்கோவிலில் காணப்படும் 11ம் நூற்றாண்டுத் தமிழ் கல்வெட்டின்படி — ஜனநாதபுரம் என்பதற்கு மாற்றுத் தமிழ் பெயராக புலனரி உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது.'

டாக்டர் பரணவிதான தன்னுடைய நூல்களில் பயன்படுத்தியிருக்கும் "பொலனறு" எனும் சொல் தமிழ்ச் சொல்லாகிய 'புலனரி' எனும் சொல்லிலிருந்து அதிகம் மாறுபடவில்லை. துட்டகைமுனுவின் விஜிதபுரதான் 'பொலனறுவ' என்ற பரணவிதானவின் கருத்து இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

மகாவம்சம் நூலைப் பதிப்பித்த திரு. வில்கெய் அவர்கள், அதனுடன் இணைத்து வெளியிட்ட பழங்கால இலங்கையின் படத்தில் இருந்து விஜிதபுர என்பது "புலத்தி" நகரத்திலிருந்து பல மைல்களுக்கு அப்பால் இருந்தது என்பது தெளிவாகியது. மகாவம்சத்தின் படி, துட்டகைமுனுவுக்கு எதிராக எல்லாளன் தலைமையில் தமிழ் வீரர்கள் மகாவலிகங்கைக்கரையோரமாக — விஜிதபுரவுக்குள் அவர்கள் தாமாகவே தள்ளப்படுமட்டும் — சுமார் 4 மாதங்கள் போராடியதாக கூறப்பட்டுள்ளது; •

இதன்படி, திராவிடர்கள் இப்பகுதி முழுவதும் எல்லாளன் காலத்திலிருந்து (அதற்கு முன்பு இல்லாவிடின்) ஆட்சி நடத்தியதற்கு ஆதாரம் இருக்கிறது. திருகோணமலையிலிருந்து திராவிட செல்வாக்கு இந்தப் பகுதியெங்கும் பரவியிருந்ததாக வோகெல் எனும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்.

— இவ்வாறு பொலனறுவைக்கும், தமிழ் மக்களுக்கும் இருந்துவந்த தொன்மைப்பிணைப்பை ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டிய அறிஞர் ஜேம்ஸ் இரத்தினம், அங்கு காணப்படும் சிலை, டாக்டர் பரணவிதான கூறியதுபோல — முதலாம் பராக்கிரமவாகுவினுடையதோ அல்லது முதலாம் விஜயபாகுவினுடையதோ அல்ல என்பதை உலக ஆராய்ச்சியாளர்களின் மேற்கோள்களுடன் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டியதுடன், அங்கு காணப்படும் சிலை தமிழ் முனிவன் அகத்தியனுடையதே என்பதை தமது கட்டுரையில் பல்வேறு ஆதாரங்களுடனும் மேற்கோள்களுடனும் நிலைநாட்டியிருந்தார்,

எச். சி. பி. பெல், வோகெல், சி. எல். வின்சர், அண்டிறீஸ் நெல், தயாராம் சாகினி, சி. வி. ஆச்சாரியா, கே. சி. குறூஸ், ஓ. சி. காந்குலி சிறீகுணசிங்கி, பி. சி. செஸ்ரீறி போன்ற ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களின்படி— பொலனறுவையிலிருப்பது அரசனுடைய சிலையல்ல — ஒர் தென்னிந்திய முனிவருடையதே என்பதை திரு. இரத்தினம்

(5-ம் பக்கம் பார்க்க)

# எண்ணம்

## யாழ்ப்பாண வளாகம்!

இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனம், 1956ம் ஆண்டிலிருந்து, தன்னுடைய மொழி, மதம், கலை, கலாசாரங்களை வளர்த்திடவும், தமிழ் மாணவ சமுதாயம் உயர்கல்வி பெற்றிடவும், பூரணத்துவமுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகமொன்று தமிழ் ஈழத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வந்திருக்கிறது.

இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கமொன்றும் ஆரம்பிக்கப்பட்டு, சில காலம் இயங்கிவந்தது—ஆயினும் அந்த இயக்கமும் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு தவறி விட்டது.

1956ம் ஆண்டிலிருந்து மாறி மாறிப் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களும் தமிழ் இனத்தின் இப்பல்கலைக் கழகக் கோரிக்கையை ஏறெடுத்துப் பார்க்கவும் மறுத்து விட்டன.

1970ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது—இன்றைய ஆளும் கட்சியான ஐக்கிய முன்னணியினர், தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கில் ஒன்றும் கிழக்கில் ஒன்றும் தெற்கில் ஒன்றுமாக மூன்று பூரணத்துவமுள்ள பல்கலைக்கழகங்களை—தாங்கள் ஆட்சிக்குவரும் பட்சத்தில் நிறுவுவோமென மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தனர்.

ஆனால்—ஆட்சிக்கு வந்ததும், ஏனைய வாக்குறுதிகளை குழித்தோண்டிப் புதைத்ததுபோலவே பல்கலைக்கழகம் பற்றிய வாக்குறுதியையும் குழிதோண்டிப் புதைத்தனர்!

மூன்று புதிய பூரணத்துவமுள்ள பல்கலைக்கழகங்களை தருவதாக கூறியவர்கள்—நாடு முழுவதற்கும் ஒரே பல்கலைக்கழகம்தான் இருக்குமென்று கல்விச்சட்டத்தையே மாற்றியமைத்தார்கள். இதன் மூலம்—தங்களுக்கு ஓர் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகம் வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கை—தமிழ் ஈழம் தனி அரசானலொழிய—நிறைவேற முடியாதபடி தடை போட்டார்கள்.

இதன்பின், தமிழ் மக்களுக்கென வட இலங்கையில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகமொன்று திறக்கப்படுமென பல மாதங்களாகக் கூறப்பட்டுவந்தது. இப்போது, இந்த புதிய வளாகம் இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் திறக்கப்படுமென இறுதியாக வந்த செய்திகள் கூறுகின்றன.

இது சம்பந்தமாக சில விஷயங்களைத் தமிழ் மக்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

திறக்கப்படவிருக்கும் புதிய பல்கலைக்கழக வளாகத்துக்கென அரசாங்கம் புதிய கட்டிடங்கள் எதையும் பணச்செலவு செய்து கட்ட முன்வரவில்லை. ஏற்கெனவேயிருந்து வரும் தரமான, பிரபல கல்லூரிகளையே சுவீகரித்து, அவற்றிலேயே புதிய வளாகத்தை அமைக்கவிருக்கிறது—வழித்தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோல! இதன் காரணமாக—இக்கல்லூரிகளில் தற்போது படித்துவரும் மாணவ மாணவிகள் பெருங்கஷ்டமடையப் போகின்றனர்.

1974-ம் ஆண்டுக்கான பல்கலைக்கழக மாணவர் தெரிவு முடிந்துவிட்டது. இனி 1975-ம் ஆண்டு தான் புதிய மாணவர் தெரிவு நடைபெறும். அரசாங்கம் மனம் வைத்தால்—உள்ளபடியே தமிழ் மக்களுக்கு உதவிசெய்ய விரும்பினால்—இந்த இடைக்காலத்தில், புதிய கட்டிடங்களை உருவாக்கி, அதில் புதிய வளாகத்தை திறக்க ஏற்பாடுசெய்யலாம்—ஆனால் அப்படிச் செய்யவில்லை. தமிழ் மக்களின் கல்விக்காக பணத்தைக் கொட்ட அரசு தயாராக இல்லையென்பது இதிலிருந்து புரிகிறது.

புதிய வளாகத்தில் சிங்களமும் தமிழும் போதனாமொழிகளாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள மாபெரும் ஆபத்தை தமிழ் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களுக்காக—தமிழ் மாணவர்கள் உயர் கல்விபெறுவதிலுள்ள கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காக—யாழ்ப்பாணத்தில் புதிய வளாகத்தை திறப்பதாக கூறும் அரசாங்கம், அங்கு தமிழை மட்டும் போதனா மொழியாக்காமல், சிங்களத்தையும் போதனா மொழியாக்குவதேன்? இங்குதான் நமக்கு ஐயம் ஏற்படுகிறது.

யாழ்ப்பாண வளாகத்திலும், சிங்கள மாணவர்களுக்கு பெருந்தொகையாக இடமளித்து—தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பை மேலும் மேலும் பறிக்கும் திட்டம் தான் இதுவா?

ஏற்கெனவே ஐந்து பல்கலைக்கழக வளாகங்கள் இயங்கி வருகின்றன. இதில் வித்தியோதய, வித்தியலங்கார வளாகங்களில்—கண்துடைப்புக்காகவும், அரசுக்கு வால்பிடிக்கும் தமிழ் கலாநிதிகள் சிலருக்கு வேலை கொடுப்பதற்காகவும் தமிழ்ப்பீடம் இடம்பெற்றிருந்த போதிலும்—சிங்கள மாணவர்களுக்கே அங்கு முதலிடம் தரப்படுகின்றன. அதுமட்டுமன்றி, அங்கு பயிலும் தமிழ் மாணவர்கள் மீது சிங்களமும் திணிக்கப்படுகிறது.

வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக்கழகங்கள் சிங்கள மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதுபோல—யாழ்ப்பாண வளாகமும் தமிழ் மாணவர்களுக்காக—தமிழ் மாணவர்களுக்கு மட்டுமாக—ஒதுக்கப்படவேண்டும்! தமிழ் மட்டுமே அங்கு போதனா மொழியாக இருந்திடவேண்டும்!

இவ்வாறு தமிழ் மக்கள் அனைவரும் கட்சி அரசியல் பேதமின்றி குரல் கொடுக்க முன்வரவேண்டும்.

இன்றேல்—சிங்களத்துக்கு இடம் கொடுத்தால்—யாழ்ப்பாண வளாகத்தின் கதையும்—ஒட்டகத்துக்கு ஒதுங்குவதற்கு இடம் கொடுத்த கதையாகவே முடியும் என்று இப்போதே எச்சரிக்க விரும்புகிறோம்.

# இருட் சிறைக்கோட்ட

அன்பு நண்பா,

ஈழத்தமிழ்க் குலத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றிலே, ஆனி ஐந்தாம் நாள் நம் நெஞ்சங்களில் என்றுமே அழியாத—அழித்திட முடியாத இடத்தை பெற்றிட்ட நாள் என்பது உனக்குத் தெரிந்திருந்தாலும், நம் இயக்கத்தின் இளைய தம்பியர்களுக்கு அந்நாளின் முக்கியத்துவத்தை நினைவூட்டிடுவதன் மூலம் அவர்களுக்கு எழுச்சியூட்டிடுவது உனதும் எனதுப் கடமையாகும்!

நண்பா, இன்றைக்கு யார் யாரோவெல்லாம் தேசிய ஒற்றுமை யென்றும், தேசிய ஒருமைப்பாடென்றும், மேடைகளிலும் பத்திரிகைகளிலும் கூப்பாடு போடுகிறார்களே—உண்மையிலேயே அந்தத் தேசிய ஒருமைப்பாடும் ஒற்றுமையும் கழுத்து நெரிக்கப்பட்டு குழிதோண்டிப் புதைக்கப்பட்ட நாள்தான் ஆனி ஐந்து!

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் யார் இந்நாட்டின் தேசிய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் கொலைசெய்தொழித்திட காரணகர்த்தர்களாக இருந்தார்களோ—அதே நபர்களே இன்றைக்கு தேசிய ஒற்றுமையென்றும் ஒருமைப்பாடென்றும் கபடநாடகமாடுவதைக் கண்டிடும் போது நம் உள்ளம் உலைக் கூடமாகவன்றோ மாறுகின்றது?

ஆம் நண்பா, இந்நாட்டுச் சிங்கள சமுதாயத்தினதும், அவர்களது அரசியல் கட்சிகளினதும் உள்ளார்ந்தர நோக்கம்—'தேசியம்' எனும் திரைக்குப்பின்னால் மறைந்து கிடந்த பயங்கர நஞ்சு—வெளிப்படையாகத் தமிழ் மக்களுக்கு தெரியவந்த நாள்தான் ஆனி ஐந்து!

நாட்டின் ஆட்சிமொழிகளாக சிங்களமும் தமிழும்—ஆக இருமொழிகளும்—சமநிலையில் அரியாசனத்திலமர்ந்திருந்த நிலை மாற்றி சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்கிய சட்டம் நாடாளுமன்றத்தில் புகுத்தப்பட்ட நாள்தான் ஆனி ஐந்து!

தமிழ் சமுதாயத்தின் சுயமரியா[...]க்கு சவால்விட்டு—தமிழ் மொழியை [...]வல நிலைக்கு தள்ளி—தமிழ் மக்களை அடிமைகளாக்கி—தமிழினத்தின் மனித உரிமைகளை காலால் மிதித்து—தமிழ்க் குலத்தை இரண்டாந்தர மூன்றாந்தர நிலைக்குத் தள்ளிய சிங்களம் மட்டும் சட்டம்—1956ம் ஆண்டு ஆனி ஐந்தாம் நாள் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட அன்றே இந்நாட்டின் தேசிய ஒற்றுமை சிதைந்தது; ஒருமைப்பாடு குலைந்தது! நாட்டுப்பிரிவினைக்கு கால்கோள் நாட்டப்பட்டது!

இந்த அநியாயச் சட்டம் நாடாளுமன்றத்தில் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா அரசாங்கத்தால் ஐக்கிய தேசியக் கட்சியினரின் பூரண ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட நேரத்தில்—அச்சட்டத்தை எதிர்த்து தமிழ்ச் சமுதாயம் குமுறியெழுந்து முதன்முதலாக போர்க்களத்தில் குதித்த நாளும் ஆனி ஐந்து தான்!

ஆம். ஈழத்து அரசியல் வரலாற்றில் முதன் முதலாக அறப்போராட்டம்—சத்[...]ர கம்—நடைபெற்றது ஆனி ஐந்தில்தான்! சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக காலி முகப் பசும் புற்றிடலில் நம் விடுதலை இயக்கத்துத் தலைவர்களும் தொண்டர்களும், கல்லடியும் பொல்லடியும் தாங்கியபடி—இரத்தத்தை கொட்டி—சத்தியாக்கிரகம் புரிந்து ஈழத்தமிழர் நிலையை உலகுக்கு எடுத்துக் காட்டிய நாளும் ஆனி ஐந்துதான்!

சிங்களக் காடையர் காதைத் துண்டாடிய போதும்-கன்னித்தமிழே எமக்குப் பெரிது என முழக்கமிட்டபடி அறப்போரிலீடுபட்டிருந்த தொண்டர் தாமரைக்குளம் செல்லையா; உருட்டி புரட்டி அடிக்கப்பட்டும்—வேட்டியும் சட்டையும் கிழிந்த நிலையிலும் உறுதி தளராது காணப்பட்ட அமரர் வன்னியனார்; தங்கம் போன்ற தன் பிள்ளைகள் தாக்கப்பட்ட போதிலும் சிந்தை குலையாது இருந்த செம்மல் தந்தை செல்வா; நெற்றியில் கல்லால் அடிபட்டு இரத்தம் கொட்டிய போதிலும்

---

### தமிழ் ஈழத்தின் 'பகத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவகுமாரின் மரணச் செய்தி கேட்டதும் யாழ்ப்பாணம் முழுவதும் பெரும் பரபரப்பு அடைந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் சிவகுமாரின் சடலத்தைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரியை முற்றுகையிட்டனர்.

சிவகுமாருக்கு இறுதி அஞ்சலி தெரிவித்து, 6-ந் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டிருந்தன. பெரும்பாலான மாணவ மாணவிகள் பாடசாலைகளை பகிஷ்கரித்தனர். எங்கும் சோகம் கப்பியிருந்தது.

கடந்த சனவரி 10ம் திகதி - யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதிநாளன்று கூடிய பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள்மீது யாழ் பொலீஸ் அதிபர் திரு. எஸ். கே. சந்திரசேகராவின் உத்தரவின் பேரில் பொலிசார் மிருகத்தனமான தாக்குதல் நடத்தியது தெரிந்ததே.

இந்தத்தாக்குதலின் பின்னர் இனம் தெரியாத யாரோ பொலீஸ் அதிபர் திரு. சந்திரசேகராவின் ஜீப்பின் மீது இருதடவைகள் கைக்குண்டு வீசியதாக சொல்லப்பட்டதையடுத்து - சந்தேகத்தின் பேரில் பொலீசார், சிவகுமார் என்ற இந்த இளைஞரைத் தேடி வந்தனர். சிவகுமாரைப் பிடித்துக் கொடுத்தால் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சன்மானம் வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தனர்.

திரு. சிவகுமாரைத் தேடி, அவரது சொந்த ஊரான உரும்பராய் முழுவதும், 200க்கு மேற்பட்ட பொலீசார் யாழ் பொலீஸ் அதிபர் தலைமையில் இயந்திரத் துப்பாக்கிகளுடன் இரவோடிரவாகச் சல்லடை போட்டுப் பார்த்தும் அவர் அகப்படவில்லை.

இறுதியில் சென்ற வாரம் கோப்பாயில் வைத்து பொலீசார் அவரைக்கைது செய்தனர். தன்னைக்கைது செய்ய வந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கியை பறிக்க திரு. சிவகுமார் முயன்றதாகவும். தனது முயற்சி கைகூடாமல் போகவே சிவகுமார் தான் ஏற்கெனவே தயாராக வைத்திருந்த கிருமி நாசினியை மடமடவென்று குடித்து தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.

பொலீசாரிடம் சிக்கிச் சித்திரவதைப்படுவதிலும் பார்க்கத் தன்னுயிரைத் தானே மாய்த்துக்கொண்ட இளைஞர் சிவகுமாரை இந்திய சுதந்திரப்போராட்டத்தில் அழியா இடம் பெற்றிருக்கும் வீரன் 'பகத் சிங்'குடன் தமிழ் மக்கள் ஒப்பிடுகிறார்கள்.

"22 வயது நிரம்பிய சிவகுமார் 1970ம் ஆண்டு 'தரப்படுத்தல்' என்னும் இனப்பாரபட்ச கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அமைக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையின் தலைவர்களில் ஒருவராவர். ஏற்கெனவே ஒன்றரையாண்டுகள் அனுராதபுரம் சிறையில் விளக்கமறியலில் இருந்து அங்கு சிறைக்கொடுமைகளை அனுபவித்தவர். தமிழ் ஈழத்தின் விடுதலையில் நாட்டம் கொண்டவர். தமிழ்மொழி, தமிழ் இனப்பற்று நிறைந்தவர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் மாநாட்டின் போது பொலீஸ் தாக்குதலால் நிலை தடுமாறிமக்கள் அவதியுற்ற சமயத்தில் தன்னுயிரைத்திரணமாகமதித்து தமிழ்ப் பெண்களையும் ஏனையோரையும் வீரமுடன் காத்து நின்ற வீரர் அவர்."

—இவ்வாறு அவரது உறவினர்கள் கண்ணீருடன் கூறுகின்றனர்.

முன்பு நாம்சுட்டிக்காட்டியபடி சிவகுமார் பின்பற்றி வந்ததாக பொலீசாரால் சந்தேகிக்கப்படும் பலாத்கார வழிகளை ஏற்காமற் போனாலும், அவரது துணிச்சலுக்கும் ஈடிணையற்ற தியாகத்துக்கும் தலைவணங்கி அவருக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள்.

இந்திய சுதந்திரப் போர் வரலாற்றில் பகத்சிங்கின் நாமம் எப்படி நின்று நிலைத்திருக்கிறதோ அதே போல தமிழ் ஈழ விடுதலைப்போரிலும் தமிழ்த்தாயின், திருவடிகளில் தன் உயிரைத்தானே அர்ப்பணித்துக்கொண்ட சிவகுமாரின் பெயர் என்றென்றும் நின்று நிலைக்கவே செய்யும் என்று உணர்ச்சிமிகு தமிழ் காளைகள் கூறுகின்றனர்.

---

### காசி ஆனந்தனை விடுதலைசெய்யக்கோரி கண்டனக் கூட்டம்!

இரண்டு ஆண்டுகளாக விசாரணையின்றி சிறையிடப்பட்டிருக்கும் கவிஞர் காசி ஆனந்தனை விடுதலை செய்யக் கோரும் கண்டனக் கூட்டமொன்றை அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவிலடியில் 8-6-74 மாலை 6.30 மணிக்கு தமிழர் கூட்டணியின் அளவெட்டிக்கிளை நடத்துகிறது.

திரு. வை. சொக்கநாதன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், வி. தருமலிங்கம், சு. நடராசா, அ. குமரகுரு, தா. திருநாவுக்கரசு, வ. ந. நவரத்தினம், சி. கதிரவேற்பிள்ளை, திருமதி. அமிர்தலிங்கம் ஆகியோர் பேசுவர்.

திரு. மு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் கவியரங்கில் அடலேறு ஆலாலசுந்தரம், உட்பட செ. விவேகானந்தன், பொ. கணேசமூர்த்தி, அ. புரந்தரன் ஆகிய இளங் கவிஞர்களும் பங்கேற்பர்.

---

### இந்[...] 'வித்தி[...]

சென்னை[...] ஆராய்ச்சி [...] அங்கு செல்[...] மன்றத்தின் [...] பல்கலைக் கழ[...] தலைவருமான [...] தன் அவர்க[...] அனுமதி வழ[...]

இம்மாந[...] கொண்டு இ[...] தார்.

அரசாங்[...] காவது அ[...] யாழ்ப்பாண[...] திரு. வித்திய[...] ரா என்ற [...]

---

### தலைவர் அமிர்[...]

(1ம் பக்கத் தொ[...]

லிங்கத்தின் வ[...] 13 பக்கங்கள் [...] கப்பட்டதாய[...]

திரு. அமி[...] இடம் [...] பயணம் பற்றி[...] ழர் கூட்டணி[...] காசி ஆனந்[...] யும் சென்னை[...] தியதாரகத்[...] உதயசூரியன் [...] றப்பட்டது. [...] கேட்கப்பட்ட[...]

சென்னைய[...] கும் தனது ம[...] யும், உலகத் [...] ஞர் பேரவை[...] டாக்டர் இ[...] தனம் பற்றியு[...] டம் சி.ஐ.டி.[...] மான கேள்வி[...] தாக திரு. அ[...] தெரிவித்தார்[...] இவற்றுக்கெல்[...] அமிர்தலிங்கம், [...] மடையாமல் [...] திலிருந்தார் [...]

தம்மிடம் [...] எடுப்பதற்காக [...] வந்த சி.ஐ.டி. [...] டர் பண்டியாம் [...]

# ட்டத்துள் இரண்டு ஆண்டுகள்...!

யமாய ...க்கு
ழியை ...வல
களை அடிமைக
ித உரிமைகளை
தலத்தை இரண்
தி தள்ளிய சிங்
ம் ஆண்டு ஆனி
த்தில் கொண்டு
ட்டின் தேசிய
மப்பாடு குலைந
ல்கோன் நாட்

நாடாளுமன்றத்
ண்டாரநாயகா
சியக் கட்சியின
ண்டுவரப்பட்ட
ர்த்து தமிழ்ச
முதன்முதலாக
ளும் ஆனி ஐந்து

லாற்றில் முதன்
— சத்...ர
ந்தில் தா...! இங்
எதிராக காலி
விடுதலை இயக்
ாடர்களும், கல்
கியபடி — இரா
க்கிரகம் புரிந்து
துக்கு எடுத்துக்
தான் !

த் துண்டாடிய
குப்பெரிது என
ரிவிடுபட்டிருந்த
ந் செல்லையா;
டும்—வேட்டியும்
ம் உறுதி தள
ன்னியனுர்; தங்
தாக்கப்பட்ட
இருந்த செம்
றியில் கல்லால்
டிய போதிலும்

நிலை குலையாதிருந்த தளபதி அமிர்தலிங்கம்; போன்ற நூற்றுக்கணக்கான தியாகிகள் கொட்டும் மழையிலே கொஞ்சமும் கலங்காது — ஈழத்தமிழர் விடுதலைப் போரை தொடக்கிவைத்த நாள் தான் ஆனி ஐந்து !

ஆம் அன்று — 1956-ம் ஆண்டு ஆனி ஐந்தாம் நாள் காலிமுகக்கடற்கரையில் தொடக்கி வைக்கப்பட்ட தமிழ் சமுதாயத்தின் விடுதலைப் போராட்டம் தான் — கடந்த 18 ஆண்டுகளாக பல்வேறு வடிவங்களில் முறைகளில் நடைபெற்று — இன்றைக்கு புதிய எழுச்சியும் உத்வேகமும் பெற்று தமிழ் ஈழவிடுதலைப்போராக — தமிழர் கூட்டணி இயக்கமாக — வளர்ச்சியுற்று நிற்கிறது.

ஆனி ஐந்து — நம் இனவிடுதலைப் போராட்டத்துக்கு வித்தூன்றப்பட்ட நாள் என்ருல் — ஆனி பத்து — நம்முடைய விடுதலைக் கவிஞன் காசி ஆனந்தன் சிங்கள வல்லூறுகளாக் சிறைப் பிடிக்கப்பட்ட நாள் என்பதை நம் தமிழினம் மறந்திடப்போமோ?

## அரசியல் மேடை

1972-ம் ஆண்டு ஆனி பத்தாம் நாள் மன்னுர் மண்ணில் வைத்து — நம் தமிழ் சமுதாயத்தின் தனிப்பெரும் சொத்தான கவிஞர் காசி ஆனந்தன் சிங்கள ஆட்சியாளரால் கைது செய்யப்பட்டார்; இந்த ஆண்டு-1974-ம் ஆண்டு ஆனி பத்தாம் நாளுடன் கவிஞர் இருட்சிறைக்கோட்டத்துள் தள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிவடைகின்றன!

ஆம் — இரண்டு ஆண்டுகள் — ஏறத்தாழ 720 நாட்கள் — தொடர்ச்சியாக உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும் ஏனைய செந்தமிழ்க் காளைகளும் விசாரணையோ விடுதலையோ இன்றி இருட்சிறைக்கோட்டத்துள் தள்ளப்பட்டுக்கிடக்கின்ற நிலைகண்டு, — இந்த அப்சாங்கத்தின் மீது இடிவிழாதா என்று தமிழ் மக்கள் குமுறிப்புழுங்குகிருர்கள்—கொதித்துக் கிடக்கிருர்கள் — கோலேந்திகளை நோக்கிக் காறி உமிழுகிருர்கள்!!

ஈழத்தமிழர் விடுதலைப்போராட்ட வரலாற்றிலே — இன்றைக்குச் சிறையிலே வாடும் காசி ஆனந்தன், சேனாதி ராசா போல — வண்ணை ஆனந்தன், மகேந்திரன் போல — ஏனைய தமிழ் இளைஞர்கள் போல — இதற்கு முன் யாருமே தியாக வரலாறு படைத்ததில்லையென்ருலும்—சிறையிலேயிருக்கும் தமிழ் இளைஞர்களும், வெளியிலே பல்வேறு துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் தங்களை ஆட்படுத்திக்கொண்டிருக்கும் வீரத் தமிழ் இளைஞர்களும் தமிழ் சமுதாயத்துக்காக தங்கள் வாழ்வையே பலிகொடுத்து வருகின்றனர் என்ருல் அது தங்களுக்கு பாராட்டுப்பெறவோ — தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ளவோ அல்ல — தங்கள் தியாகம் தமிழ் சமுதாயத்தை எழுச்சிபெறச் செய்யாதா — தமிழ் சமுதாயம் விடுதலை உணர்வு பெற்று வீறுகொண்டெழுந்திடாதா என்கிற அந்த ஆசையிலேயே அவர்கள் விடுதலைப் போராட்டம் எனும் பலி பீடத்தில் தங்களைத் தாங்களே ஒப்படைத்துக்கொண்டிருக்கிருர்கள்! சித்திரவதைகளை—அடி உதைகளை — பெருங்கொடுமைகளையெல்லாம் அவர்கள் இன்முகத்துடன் தமிழ் சமுதாயத்துக்காகத் தாங்கிக்கொண்டிருக்கிருர்கள்!

''பொங்கு வெறியர் சிறை மதிலுள் எனைப்
பூட்டி வைத்தாலும் — என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் — உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும் — ஒரு
செங்களம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனு?''

என்று உணர்ச்சிக் கவிஞர் பாடிய படி — அந்தத் தியாக உணர்வுடன் அத்தமிழ் இளைஞர்கள் தமிழ் சமுதாயத்துக்காக இன்றைக்கு தங்களை முற்றுமுழுதாக அர்ப்பணித்து வருகின்றனர்! சிறைச்சாலையில் சிங்கள வெறியர்களின் அடிகளையும் உதைகளையும், தாக்குதல்களையும் இழிமொழிகளையும் ஏளனப் பேச்சுக்களையும் தமிழ் அன்னையின் பெயரால் தமிழ் சமுதாயத்தின் பெயரால் தாங்கிக்கொண்டு வருகின்றனர்.

இந்த இளைஞர்கள் மீது விழுகின்ற ஒவ்வொரு அடியும் இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழன் உடல் மீதும் விழுகின்ற அடியாகும்! இந்த இளைஞர்களுக்கு விழுகின்ற ஒவ்வொரு உதையும், தமிழ்த்தாய்க்கு — தமிழ் சமுதாயத்துக்கு விழுகின்ற உதையாகும். இந்த உண்மையை அரசு மறந்துவிடக்கூடாது.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுவது தான் சுதந்திர உணர்ச்சி! துன்பங்களும், கஷ்டங்களும், கண்ணீரும் தியாகமும் தமிழ் சமுதாயத்தின் சுதந்திர உணர்வை வளர்க்குமே தவிர தேய்த்துவிடாது; ஏனெனில் தியாகப்பாதையின் இறுதியில் கிடைப்பது தான் சுதந்திரம் என்பதை உலக நாடுகளின் விடுதலை வரலாறுகள் நமக்கு எடுத்துக்கூறுகின்றன! தியாகத்துக்குப் பின்வாங்கும் சமுதாயம் சுதந்திரத்தின் பெயரை உச்சரிக்கவும் இலாயக்கற்ற சமுதாயம் என்பது நமக்குத்தெரியும்!

எனவே நண்பா — தர்மத்தின் வாழ்வுதனை இன்றைக்கு சூது கவ்விஞலும் தர்மம் மறுபடி வெல்லும் எனும் நம்பிக்கையுடன் இலட்சியப் பாதையில் தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக நம்மை அர்ப்பணிப்போம்!

— உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

---

## இந்தியா செல்வதற்கு 'வித்தி'க்கு அனுமதி மறுப்பு

சென்னையில் நடைபெறும் இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்கென அங்கு செல்லவிருந்த அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளைத் தலைவரும் இலங்கைப் பல்கலைக் கழக பேராதனை வளாக தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களுக்கு இறுதி நேரத்தில் கல்வியமைச்சு அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

இம்மாநாட்டில் திரு. வித்தியானந்தன் கலந்துகொண்டு இரு ஆராய்ச்சி கட்டுரைகளும் படிக்க இருந்தார்.

அரசாங்கத்தின் முடிவுக்கு விரோதமாக நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்திய காரணத்தினுல்தான் திரு. வித்தியானந்தன் இவ்வாறு பழிவாங்கப்படுகிருரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

---

தலைவர் அமிர்தலிங்கம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கத்தின் வாக்குமூலம் 13 பக்கங்களில் எடுக்கப்பட்டதாம்.

திரு. அமிர்தலிங்கத்திடம் அவரது இந்திய பயணம் பற்றியும், தமிழர் கூட்டணி பற்றியும், காசி ஆனந்தனைப் பற்றியும் சென்னையிலுள்ள இந்திய தூதரகத்தின் முன்னுல் உதயசூரியன் கொடி ஏற்றப்பட்டது பற்றியும், கேட்கப்பட்டதாம்.

சென்னையில் கல்வி கற்கும் தனது மகனைப் பற்றியும், உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. சனர்த்தனம் பற்றியும்கூட தம்மிடம் சி.ஐ.டி.யினர் ஏராளமான கேள்விகளை கேட்டதாக திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இவற்றுக்கெல்லாம் திரு. அமிர்தலிங்கம், ஆத்திரமடையாமல் அமைதியாக பதிலிறுத்தாராம்.

தம்மிடம் வாக்குமூலம் எடுப்பதற்காக வீடு தேடி வந்த சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையிடம், திரு. மகேந்திரன் வீட்டிலிருந்த தந்தை செல்வாவின் சிலையை எடுத்துச்சென்றது பற்றியும், 'தமிழ் வாழ்க' என்று மேசையில் எழுதிய தற்காக திரு. சேனாதிராசாவை தாக்கியது பற்றியும் தாம் குறைப்பட்டது உண்மையென்றும், ஆனால் எந்தக் கட்டத்திலும் பஸ்தியாம்பிள்ளையை அச்சுறுத்தும் தோரணையில் தாம் பேசவில்லையென்றும் திரு. அமிர்தலிங்கம் தமது வாக்குமூலத்தில் தெரிவித்தாராம்.

அட்டேர்னி ஜெனரல் திணைக்களம் காசி ஆனந்தன் மீது வழக்குப்போட முடியாது என்று கைவிரித்த பின்னரும் அவரை விடுதலை செய்யாது தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்திருப்பதாக தாம் கூறியிருந்தது உண்மையென்றும் திரு. அமிர்தலிங்கம் சி. ஐ. டி. அதிகாரிகளிடம் ஊர்ஜிதம் செய்தார்.

மற்றேர் கேள்விக்கு பதிலளிக்கையில்—தமிழ் நாட்டில் ''ஜெயராமன் ஸ்டுடியோ'' என்ற பெயரில் ஒரு ஸ்டூடியோ இருப்பதாக தாம் கேள்விப்படவில்லையென்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

---

யாழில் எழுந்த தமி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது கட்டுரையில் சுட்டிக்காட்டினுர்.

ஈழத்து ஆனந்தக்குமாரசாமியும், பொலனறுவைச் சிலை ஓர் தமிழ் முனிவருடையதே என்று குறிப்பிட்டிருப்பதையும் திரு. ஜேம்ஸ் இரத்தினம் தமது கட்டுரையில் எடுத்துக்காட்டினுர்.

இலங்கை அரசு தன்னுடைய ரூபா நோட்டிலும், உல்லாசப் பிரயாணிகள் பிரசாரத்தாள்களிலும் இந்தச் சிலையை பராக்கிரமபாகுவின் சிலையென்று குறிப்பிட்டிருப்பதை சுட்டிக்காட்டிய திரு. இரத்தினம், இலங்கையிலிருக்கும் ஒரு பழைய சிலையென்ற முறையில் இதை அரசு பயன்படுத்தினுலும் உண்மையை கண்டறியும் முயற்சிக்கு அரசு தடையாக இருக்கக்கூடாது என்றும் வலியுறுத்தினுர்.

பொலனறுவைச்சிலை, ஓர் அரசனுடைய சிலையல்ல; முனிவருடையதுதான் என்ருல், அது 'கபில' எனும் பௌத்த துறவியின் சிலையாக இருக்கும் என்ற பரணவிதானையின் மற்றேர் கருத்தையும் திரு. ஜேம்ஸ் இரத்தினம், அவர் ஏற்கெனவே கூறியிருந்த ஒரு கருத்தை — அதாவது அச்சிலையில் இந்து பிராமணீய அம்சங்கள் பெருமளவு காணப்படுவதாக அவரே கூறியிருந்ததை — எடுத்துக்காட்டி பொடிப்பொடியாக்கினுர்.

அகத்தியரைப்பற்றி ஹேராமன் ஜோர்ஜ் ஜாக்கோபி, எனும் சமஸ்கிருதப்புலவர் குறிப்பிடும்போது ''அகத்திய முனிவரில் ஒரு சிறப்பு என்னவென்ருல் — அவர் ஒரு பிரபல வேட்டைக்காரராகவும், வில்லாளியாகவும் இருந்ததே'' என்கிறர். பொலனறுவையிலுள்ள சிலை அகத்தியருடையதே என்ற நிலையை இது மேலும் உறுதிப்படுத்துகிறது. 9-ம் நூற்றுண்டைச் சேர்ந்த இரு சமஸ்கிருதப்புலவர்கள். இலங்கையிலுள்ள அகத்தியர் சிலை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தெட்சண கைலாய மான்மியம் எனும் நூல், திருக்கோணமலை வரலாறு பற்றியும், மகாவலிகங்கைக் கரையோரம் நெடுகிலும் பரவியிருந்த இந்து — திராவிட செல்வாக்கைப் பற்றியும் கூறுகிறது அகத்தியரே தமிழர்களுக்கு ஆதியில் விஞ்ஞானத்தையும் இலக்கண இலக்கியங்களையும் போதித்தவர் என்று கூறப்படுகிறது. அப்படியிருக்கும்போது, முனிவர் தனது கரங்களில், நூலையும் தோளில் அம்புறாத்தூளியையும் கொண்டிருப்பதில் ஆச்சரியமில்லை!''

— இப்படிக் கூறித் தமது கட்டுரையை முடித்திருந்தார் திரு. ஜேம்ஸ். இரத்தினம் அவர்கள்.

---

சிவகுமாரனின் வீரத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவகுமாரின் இறுதிச் சடங்குகள் வெள்ளிக்கிழமை (7—6—74) பிற்பகல் 3 மணிக்கு அவரது பிறந்த ஊரான உரும்பராயிலுள்ள வேம்பன் மயானத்தில் நடைபெற்றது.

சிவகுமாரனின் மரணத்துக்கு துக்கம் தெரிவித்து ஆங்காங்கே பறக்கவிடப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் கூட பொலிசார் கண்களை உறுத்தின. எனவே அவற்றை அகற்றுவதில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

---

சிறையில் 60 நாட்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அயர்லாந்துவிடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவரான மைக்கேல் ஹோகன் என்ற 24 வயதான இவ்விளைஞர், தனது இயக்கத்தை வளர்ப்பதற்காக நிதி சேகரிக்கும் பொருட்டு நடந்த ஒரு வங்கிக்கொள்ளையில் சம்பந்தப்பட்டதாகக்குற்றம் சாட்டப்பட்டு ஏழாண்டு கால சிறைத்தண்டனை அனுபவித்துவந்தார்.

தம்மை ஒரு அரசியல் கைதியாக கருதவேண்டும் என்றும் இதர கிரிமினல் குற்றவாளிகளுடன் சேர்த்து அடைத்து வைக்கக்கூடாது என்றும் கோரியே இவர் உண்ணாவிரதம் இருந்து வந்தார்.

---

ஆம். அறிஞர் ஜேம்ஸ் இரத்தினம் அவர்கள் போல — தமிழ் அறிஞர்கள் இவ்வாறு முன்வந்து, இந்நாட்டுக்கும் தமிழர்களுக்குமிடையேயுள்ள அநாதித் தொடர்புகளை மறுக்கொணு ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி பரணவிதான போன்றவர்களின் பொய்வாதங்களை பிய்த்தெறிவார்களாயின் — ஈழத்தமிழர்களை வந்தேறு குடிகள் என்று யார் தான் துணிந்து கூற முடியும்? ஏனெனில் வந்தேறு குடிகள் உண்மையிலேயே யார் என்பது உலகுக்கு தெரிந்துவிடுமன்றே?

— வளரும்

---

## அருள்விருந்து

''நல்வாழ்வு வாழ்பவன் நல்லுபதேசம் செய்பவனை விட மேலோன்.''

— தர்மசக்கரம்.

15 மில்க்வைற் நீல் சோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை
தமிழ்க்கவிஞன் பாரதிதாசன் செத்ததுண்டோ?

# "தமிழை அடிமைத்தனத்தில் விட்டு விட்டு தமிழன் உரிமை வாழ்வு நடத்த முடியாது!

## தமிழ் வாழ்ந்தாலே தமிழனும் வாழ முடியும்!"

## இளங்கோ அடிகள் விழாவில் சிலம்புச் செல்வர் உரை!

'தமிழன் வாழ்ந்தால் தான் தமிழ் வாழும்' என்பது, நிலைமையைத் தலைகீழாகப் பார்ப்பதாகும். உண்மை யென்னவென்றால் தமிழ் வாழ்ந்தால் தான் தமிழன் வாழ முடியும். தமிழை அடிமைத்தனத்தில் விட்டுவிட்டு, தமிழன் உரிமை வாழ்வு நடத்தமுடியாது. தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழ் இடம் பெற்றால்தான்—தமிழ் நாட்டிலே, ஆட்சிமொழியாக, பல்கலைக் கழகப் பயிற்சி மொழியாக தமிழ் மட்டுமே வந்தால்தான் உத்தியோகங்களெல்லாம் தமிழருக்கே ஆகும். அப்போது தான் தமிழன் வாழ முடியும்.

அப்படிக்கின்றி, தமிழ் நாட்டில் எங்கும் எதிலும் அந்நியமொழி — அது இந்தியானாலும், இங்கிலீஷானாலும்—ஆதிக்கம் செலுத்தினால், வந்தவன் போனவனெல்லாம் உயர் பதவிகளில் அமர்ந்துவிடுவான். தமிழ் நாட்டின் சொந்த மகனான தமிழன் நொந்து அழிவான். அந்த நிலை ஏற்பட்டிருப்பதைத் தவிர்க்கத்தான்—இனியும் ஏற்பட்டு விடாமல் பார்த்துக் கொள்ளத்தான் 'தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே இடம்பெற வேண்டும்' என்று நானும் கலைஞரும் கூறுகின்றோம்.

வந்தவன் போனவனெல்லாம் இங்கு அதிகாரப் பதவிகளில் அமர—ஆட்சியைப் பிடித்துக்கொண்டு தமிழர் மீது ஆதிக்கஞ் செலுத்த, இந்தத் தமிழ் நாடு சத்திரமோ, சாவடியோ அல்ல; நாலரை கோடி தமிழர்களின் தாய்நாடு! தமிழருக்குள்ளேயே பூசலை வளர்க்க தமிழ்மொழி ஒரு கருவியாக விடக்கூடாது; தமிழினத்தார், தமிழின் பெயரால் ஒன்றுபட வேண்டும்.

"நாம் இளங்கோவடிகளுக்கு விழாவெடுக்கக் காரணமென்ன? அவர், சேர நாட்டின் இளவரசர் என்பதா?—இல்லை. அது, மன்னர்கள் சகாப்தமல்ல; மக்கள் சகாப்தம். இதிலே, அரசர்களுக்கும் இளவரசர்களுக்கும் விழா எடுக்க எனக்கு ஆர்வமில்லை.

இளங்கோ, 'மகாகவி' என்பதற்காகவா அவருக்கு விழா எடுக்கிறோம்? அப்படியுமில்லை. இளங்கோவுக்குப் பின், அவர் பேரனை மகாகவி கம்பர் தோன்றி, கவித்துவத்திலே இளங்கோவை வென்றுவிட்டார்!

இளங்கோவடிகள், தாம் படைத்த சிலப்பதிகாரத்திலே, நீதிகளை போதிக்கிறரே—நெறிகளை வற்புறுத்துகிறரே. அதற்காகவா அவருக்கு ஆண்டுதோறும் விழா எடுக்கிறோம்? அப்படியுமில்லை இளங்கோவுக்கு முன்னோரான வள்ளுவரின் திருக்குறள் பெருத நீதி போதனையையா சிலப்பில பெறுகிறோம்?

கம்பரும் பாரதியும் பிறந்த பின்னரும் நாம் இளங்கோவுக்கு விழா எடுக்கிறோமே, காரணம் என்ன?

இளங்கோ, 'தமிழன்' என்ற இனவுணர்ச்சியை போதிக்கிறார். தமிழ் நாடு தான் நம் தாய்வீடு என்ற



மொழி வழி நாட்டுப் பற்றைப்போதிக்கிறார். தமிழே நம் தாய்மொழி என்ற மொழிப்பற்றை நமக்கு ஊட்டுகின்றார். இந்தக் காரணங்களாற்றான். இளங்கோவுக்கு விழா நடத்தி, 'தமிழன்' என்ற இனப் பற்றை — தமிழ் நாட்டுப் பற்றை — தமிழ் மொழிப் பற்றை வளர்க்க முயல்கிறது தமிழரசுக் கழகம்.

இளங்கோ காலத்தில், தமிழ் நாட்டைத் தமிழர் தான் ஆண்டனர்; வந்தவன் போனவனையெல்லாம் ஆளவிடுவதற்கு அன்றைய தமிழன் ஏமாளியல்ல.

சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்தில், தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழ்தான் முதன்மை பெற்றிருந்தது. ஆயினும், தமிழரெலாம்—எவராலும், எதனாலும் எதற்காகவும்,—பிரிக்க முடியாத — ஓரினத்தார் என்ற ஒற்றுமை உணர்விருக்கவில்லை.

"தமிழ் நாடு ஒரு தனி நாடு—அது முழுவதும் நம் தாய் வீடு" என்ற நாட்டுணர்வு தமிழரிடையேயிருக்கவில்லை. சேர மண்டிலத்தார், மற்றுள்ள சோழ — பாண்டி மண்டிலங்களைத் தங்களுக்கு அயல் நாடுகளாகக் கருதினர். மும்மண்டிலத்து மன்னர்களும் பரஸ்பரம் பகைகொண்டு அடிக்கடி போரிட்டு, தங்களைப் பலவீனப் படுத்திக்கொண்டனர்.

இந்த மண்டிலப் பிரிவினைகளை பிளவுகளை மறந்து தமிழர் ஒன்றுபடத் தூண்டினார் இளங்கோ: காவா நாவினரைக் கற்பித்து, அவர்களுக்கெதிராக, சேர வேந்தனைப் படையெடுக்க வைத்தார். காவா நாவினர் பழித்தது தன்னையல்ல. சோழ — பாண்டியரையே என்பதனையறிந்த பின்னரும் தமிழரில் யாரைப் பழித்தாலும், அது தன்னையும் பழித்ததாகுமென்று இன உணர்வால் கூறுகிறான் சேரமன்னன். அந்த இன உணர்வை ஒற்றுமையை செங்குட்டுவன் மூலம் தமிழினத்தாருக்குப் புகட்டத்தான் நான் சிலம்பைப் போற்றுகிறேன்;

இளங்கோ காலத்திலே, சேர நாட்டு மக்கள், ஏனைய சோழ — பாண்டியரை வாழ்த்தி, வழிபடும் வழக்கமிருக்கவில்லை. அப்படியே, சோழநாட்டு மக்கள் ஏனைய சேர—பாண்டியரை வாழ்த்துவது வழக்கமில்லை; அது போல, பாண்டி நாட்டு மக்கள், சேர சோழ மன்னர்களைப் போற்றிப் புகழ மாட்டார்கள். இந்த மனப்பான்மையை மாய்த்தொழிக்க விரும்பிய இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே வாழ்த்துக் காதையிலே, சேர நாட்டுப் பெண்கள் வஞ்சி நகரத்து வாழ்வரசியர், சேர—சோழ—பாண்டியர் மூவரையுமே முறைப்படுத்தி வாழ்த்துவதைக் கற்பித்துக் காட்டுகிறார்.

இளங்கோ, முன் எப்போதோ இன்றுள்ள தமிழகத்திற்குத் தெற்கே பஃறுளியாறும் பன் மலையடுக்கமும் கொண்ட குமரிக் கண்டம் ஒன்று இருந்ததைச் சிலப்பதிகாரத்தில் நமக்கு எடுத்துக் காட்டி, அதனைக் கடல் கொண்டுவிட்ட நிகழ்ச்சியையும் நினைப்பூட்டுகிறார். அதனைச் சொல்லும்போது, தன் தாயகத்தின் ஒரு பகுதியை—ஏன், பெரும் பகுதியைக் கொண்டதனைப் பொருமல், 'கொடுங் கடல்' என்று மனக் குமுறலோடு கூறுகின்றார்;

துறவியான அவருக்கே தன் தாயகத்தின் ஒரு பகுதி பறிபோனதை நினைக்கும் போது, நெஞ்சம் குமுறிய தென்றால், அதனை விழுங்கிய கடலைப் பார்த்து, "ஏ கொடுங் கடலே" என்று சினந்து கூறினாரென்றால், இன்றைத் தமிழினத்தின் எல்லைப் பகுதிகள் பறிபோனால், நானும் கலைஞரும் பொறுப்போமா? நாங்களென்ன, துவராடை கட்டிய துறவிகளா?

இளங்கோ, தனது தாயகமான தமிழகத்தை, 'தெய்வங்கள் காக்கும் திருநாடு'—என்கிறார். சங்க காலப் புலவர்கள், தமிழகத்தின் எல்லைகளைக் கூறுங்கால், 'வேங்கடம்—குமரி தீப் புனற்பௌவம்' என்றே கூறினர். அதாவது, "வடக்கரண் மலை; தெற்கரண் கடல் நீர்"— என்றே கூறினர். முதன் முதலாக இளங்கோ வடிகள் தான்—'தமிழகத்தின் வடக்கரண் நெடியோன்குன்றம். தெற்கரண் தொடியோள் பௌவம்' என்றார்; தன்னுடைய—நம்முடைய தாய் நாடான தமிழ் நாடு ஆண் தெய்வமும் பெண் தெய்வமும் நின்று காக்கும் எல்லைகளைக் கொண்ட தெய்வத் திருநாடு—என்று பெருமிதத்தோடு கூறினார்; அந்த எல்லைகளை மீட்க எனக்கு அறிவழித்தது ஆற்றலத்தது இளங்கோவின் சிலம்புதான்!

இளங்கோ, சாதி—மத—வருண வேற்றுமைகளை — விரோதங்களை அகற்றி, தமிழரை ஒரு குலமாக ஒன்றுபடுத்த விருப்பி சிலப்பதிகாரத்தைப்படைத்தார்.

மூன்றாவது வருணத்தவளான கண்ணகியைத் தெய்வமாக்கி, முதல் வருணத்தவளானதேவ நதியை கண்ணகி கோயில் பூசாரியாக்கி' இரண்டாவது வருணத்தவரான மன்னர்களையெல்லாம் கண்ணகி கோயில் முன்வர் நிறுத்தி, அம் மாபத்தினியை வழிபடச் செய்தார்.

இளங்கோ காலத்தில், வடக்கிருந்து மத ரீதியான படையெடுப்பு வந்து கொண்டிருந்தது. சமண, பௌத்தமதப் பிரசாரகர்கள் திமு திமுவெனத் தமிழ் நாட்டில் புகுந்தவண்ணமிருந்தனர்; அந்த மதப் படையெடுப்புகள், பின்னால் வரவிருக்கும் அரசியல் படையெடுப்புகளும் ஆரம்பமாக அமைந்து விடுமோ என்று அடிகள் அஞ்சியிருக்கவேண்டும். தமிழகத்தின் சுதந்திரத்திற்கு தமிழினத்தின் ஒற்றுமைக்கு-தமிழ் மொழிக்கு தமிழர்தம் கலாசாரத்திற்கு ஏதோ கேடு வரக்கூடும் எதிர்காலத்தில் என்பதாக அவர் ஐயுற்றார்; அந்தக் கேடு வராமற் காக்கவே அவர் தமிழினத்தை ஒற்றுமைப்படுத்த விரும்பினார். சமண, பௌத்த வரவை அவர் தடுக்க விரும்பவில்லை, அந்தப் புதுவெள்ளம் 'தமிழர்' என்ற இன உணர்வை அழித்துவிடக் கூடாதே-என்றுதான் கவலைப்பட்டார். 'தமிழர்' என்ற உணர்வையும் ஒற்றுமையும் அழிந்தால், தமிழகம் வந்தவனுக்கெல்லாம் அடிமைப்பட்டுவிடக் கூடுமென்று அவர் அஞ்சினார் அதனால், மத உணர்வுக்கும் இனவுணர்வுக்குமிடையே சமரசம் காண தமது காப்பியத்திலே வழிவகுத்தார்.

ஆயினும் என்ன? இளங்கோ தமது முயற்சியில் வெற்றிபெறவில்லை; அவரது எச்சரிக்கை தோற்றுவிட்டது. தமிழர் ஒன்றுபடத் தவறினர். 'தமிழர்' என்ற இனவுணர்வை இழந்து, சைவர்-வைணவர்-சமணர்-பௌத்தர் என்று மத வாரிப் பிரிந்து, பரஸ்பரம் பகைத்துப் போரிட்டனர். அதன் [illegible]வாக, கி. பி. 4ஆம் நூற்றாண்டளவில் முதன்முதலாகக் களப்பிரர் தமிழ்நாட்டில் புகுந்தனர். தமிழர் அரசுரிமையைப் பறித்து, அவர்களைக் கொடுமைப்படுத்தி ஆண்டனர்? அவர்களையடுத்து, சாளுக்கியர்-பல்லவர்-ஆந்திரர் (விஜயநகரத்தரசர்)-மகாராஷ்டிரா-மொகலாயர்-பிரிட்டிஷார்-போர்ச்சுகீசியர்-பிரெஞ்சுக்காரர் என வழி வழி நாடோடிக் கூட்டத்தினர் ஆயிரமாண்டுகளுக்கு மேலாக நம் நாட்டில் ஆதிக்கம் செலுத்தினர்.!

இளங்கோ சிலப்பதிகாரத்தைப் படைத்த காரணத்தை-அதிலே அவர் போதிக்கும் அரசியல் நெறிகளை இனியேனும் நினைவில் கொள்வோமாக!"

செங்கோல்

---

## மன்னாரிலும் குடியரசு நாள் பகிஷ்கரிப்பு தீவிரம்!

ஈழத்தமிழினம் இன்றைய அரசாங்கத்தினால் தாழ்த்தப்பட்டு 'குடியரசு' என்னும் பெயரால் அடிமையினமாக்கப்பட்டு கடந்த மே 22 உடன் மூன்றாண்டுகளாகின்றன. அந்தக் கரிநாளின் மூன்றாம் வருடப் பூர்த்தியை அரசு கொண்டாடிய போது தமிழ் உணர்வுள்ள எம் மாணவர்கள் 21-5-74இல் பாடசாலை செல்லாமல் பகிஷ்கரிப்பு செய்ததுடன் அன்று காலையிலிருந்து மாலை 3 மணிவரை உண்ணா விரதமும் அனுசரித்தனர்.

அன்று பாடசாலைக்குச் சென்ற புனித சவேரியார் கல்லூரி மாணவ மாணவிகளின் தொகை ஐந்து வீதத்தினரே. ஆனால் இதை வீரகேசரியில் 27-5-74ல் வெளியிட்ட செய்தியில் பாடசாலைக்குச் சமுகமளிக்காதவர்கள் ஐந்து வீதத்தினர் எனப்போடப்பட்டுள்ளது. இது மன்னார் மக்களைக்கேவலப் படுத்தியிருக்கின்றது. இத்தவறை அறியாமல் செய்த மன்னார்ப் பகுதி வீரகேசரி நிருபர் இனியும் அப்படி தவறாக நடந்து தம் கௌரவத்தை இழக்காமலும் மன்னார் மக்களின் பழிச்சொல்லுக்கு ஆளாகாமலுமிருப்பது விரும்பத்தக்கது.

இலங்கைத் தமிழ் மக்கள் இழந்த உரிமைகள் அனைத்தையும் மீண்டும் பெறுவதற்கும் வீறுகொண்டெழுந்து, ஒன்றுபட்டுச் சேவை செய்யும் இவ்வேளையில் அம்மகா சேவைக்கு கைகொடுத்துத் தொண்டாற்ற மன்னார் மக்களும் ஆயத்தமாகி விட்டார்கள் என்பதைமேற்கொண்ட பகிஷ்கரிப்பு, உண்ணாவிரதம் போன்றவற்றால் உணரக் கூடியதாயிருக்கின்றது;

— இவ்வாறு மன்னார் தமிழரசுக்கட்சிக்கிளையைச் சேர்ந்த ஜோர்ஜ் மகேந்திரன் எழுதியுள்ளார்.

---


### ஓராண்டு நினைவுதினம்

திருமதி த. பாலபரமேஸ்வரி அவர்கள்

பூசைக் குகந்த மலரென இறைவன்தன்—பாதம் அலங்கரிக்க அழைத்துக் கொண்டாரோ!

தோற்றம் 14-7-1945



மறைவு 21-5-1973

திருமதி தங்கவேலாயுதம் பாலபரமேஸ்வரி அவர்களின்

முதல் ஆண்டுத் திவசம் இன்று வைகாசி 25 (8-6-74) சனிக்கிழமை கரணவாய் வடக்கு கரவெட்டியிலுள்ள அவர்களது இல்லத்தில் நடைபெறும்.

தெய்வத்தின் சாயலில் வந்து எங்களுக்கெல்லாம் மாறாத மகிழ்ச்சியையும் முடிவில்லாத இன்பத்தையும் வாரி வழங்கிவிட்டு மிகக் குறுகிய காலத்துக்குள் இறைவன் திருவடி சேர்ந்துவிட்ட, என் உயிரிலும் மேலான அன்பும் பண்பும் நிறைந்த மனைவியின் ஆத்மா சாந்தியடைய இறைவரை மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு,

அன்புக் கணவர் அ. க. தங்கவேலாயுதம்.

அவ்வண்ணமே அன்பு மகள் செல்வி: த. ஸ்ரீவிஜயலட்சுமி.

[சமீபத்தில் நான் மட்டக்களப்புத் தமிழகம் சென்று இரு நாட்கள் தங்கியிருந்தேன். சுமார் பதினைந்து வருடங்களின் பின் அங்கு சென்ற நான் மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்க முன்னாள் செயலாளர் திரு. எஸ். ஜீ. ஜெயசிங்கம் அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்தேன். அப்போது அவரது நெருங்கிய நண்பர் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகள் பல கையெழுத்துப் பிரதிகளாக அவரிடம் இருந்தன. நண்பர் அவற்றில் சுவையான பகுதிகளை எனக்குப் படித்துக்காட்டி மகிழ்ந்தார். அவர் படித்துக் காட்டிய கவிதைகளில் சில என்னை மிகவும் கவர்ந்தன. சுதந்திரன் வாசகர்களுக்காக எனக்குக் கிடைத்த சில கவிதைகளை இங்கு தருகின்றேன். இக் கவிதைகள் பத்திரிகைகளில் வராதவை. தமிழுணர்ச்சிக் கவிதைகளையே இங்கு வாசகர்களுக்கு விருந்தாக்குகின்றேன். —புத்தொளி—

# தமிழர் வாழ்வு

புலிபொறிக்க நெடுஞ்செழியன் இமயம் போனான்!
 பொங்கும் அலை, கடல் தாண்டி வளவன் போனான்
வலிபடைத்த மார்புதனில் காயம் பெற்றான்!
 வரலாற்றில் இடம்பெற்றான் தமிழர்பிள்ளை!
தளதளத்த உடலோடு கிழட்டு வீரன்
 தமிழ் வீரன் எல்லாளன் உயிரைவிட்டான்!
எலிகடித்த நூலைப்போல் இருந்ததோடா?
 இராவணனின் பொற்கால தமிழர் வாழ்வு!

மோதவரும் காளையொடு சண்டை செய்வார்!
 முறமெடுத்து வேங்கைகளை விரட்டிவைப்பார்!
சாதலியைக் கொல்லவரும் யானை மீது
 கைபோட்டுப் போர் செய்வார்!
 கவிப்புக்கொள்வார்!
பாதியிலே களம்விட்டுப் பறக்கமாட்டார்!
 பதவிகளில் ஏமாந்து சாயமாட்டார்!
ஆதியிலே தமிழ் மாந்தர் கண்ட வாழ்வை
 ஆயிரமாய்ச் சொன்னாலும் அடங்குமாமோ?

செந்தமிழ் பேசும் மக்காள்!
 சென்றோர் வாழ்வைச் சொன்னேன்!
இந்தநாள் எதனைச் சொல்வேன்?
 இழிநிலை சொல்லுவேனா?
சந்தையில் மானம் என்ற
 சரக்கினை விற்று வாழும்
விந்தையைச் சொல்லுவேனா?
 வேறெதைச் சொல்லுவேன் யான்?

தாய்மொழி வேட்கை இல்லை!
 தமிழ்வெறி அறவே இல்லை!
நாயிடம் உள்ள நன்றி
 நம்மவர் குலத்தில் இல்லை!
பாயுமோர் உணர்ச்சி இல்லை!
 பரம்பரை எண்ணம் இல்லை!
வாயொடு மட்டும் வாழ்ந்து
 வருகிறோம் எதைநாம் செய்தோம்?

எட்டப்பர் வேலை பார்த்தோம்!
 எதிரிக்கு வாய்ப்புத் தந்தோம்!
பட்டத்தைத் தேடிப் போனோம்
 பதவிக்கு வாழ்வை விற்றோம்!
திட்டவே கற்றோம்! தின்றோம்!
 தேசியம் பேசிப் பார்ப்போம்!
பெற்றநம் தாயை மட்டும்
 பேணுதல் மறந்தோம்! வீழ்ந்தோம்!

ஃ ஃ ஃ

ஆதலால்தான் என்றன் அருமைத் தமிழினமே!
வேதனையால் வாடிநான் விம்முகிறேன்... என்செய்வேன்?
கண்விழித்து நாளெல்லாம் கருவாடாய் மெலிகின்றேன்!
மண்இழுத்துக் கொள்ளாதா என்றுமனம் நோகின்றேன்!
தூங்கும் தமிழினமே! துள்ளியெழ மாட்டாயா?
ஏங்கும் புலவன் எழுப்பிவரும் வார்த்தைகளை
ஓடிவந்து கேட்டால் உணர்ச்சி பிறக்காதா?
பாடும் தமிழ்வாயில் பந்தடிக்கும் புலவர்க்கு
வீரம் படைக்கும் வெறியுண்டாம் என்பதனை
அறியத்தான் மாட்டீரோ? வெற்றிபெற மாட்டீரோ?
உள்ளகுறை சொன்னால் உணராதோ நெஞ்சங்கள்?
வல்லமைகள் எங்கே? வளம் எங்கே சொல்தமிழா?

 "படைநடத்தி மலைமுகத்து
 கொடிபொறித்த தமிழகம்
 துடிதுடித்து அடிபிடித்து
 குடிகெடுத்து வாழ்வதோ?
 சொல்!

 கடல்கடந்த நிலமடைந்து
 கதையளந்த தமிழகம்
 உடல்வளைந்து நிலைதளர்ந்து
 ஒளியிழந்து வாழ்வதோ?
 சொல்!

 மகனிறக்க முலையறுக்க
 முடிவெடுத்த தமிழகம்
 புகழிறக்க மொழியிறக்க
 வெளிநகைக்க வாழ்வதோ?
 சொல்!"

என்றுநான் ஏங்கி இருவிழியும் குளமாக்கி
நின்று புலம்புகிறேன்! நெஞ்சால் அலறுகிறேன்!
ஐயோ! தமிழினமே! ஐயோ தமிழினமே!
உய்யும்நாள் காணநீ ஓடி வரமாட்டாயா?
கண்ணீர் துடைத்த கவிபடைக்க மாட்டாயா?
என்னதான் செய்வேன்! எலும்பாக நானுள்ளேன்!
உள்ளக்கொதிப்பை உணர்ச்சி வடிவாக்கிச்
சொல்லி முடித்தேன்! தமிழவையீர்! என்வார்த்தை
பிழைசேர்க்கும் என்றால் பெரியார்போல் மன்னியுங்கள்
வலுசேர்க்கும் என்பீரேல் வாழ்த்துங்கள்! வருகின்றேன்!

காசி ஆனந்தன்

# நேரு-கொத்தலாவலை ஒப்பந்தம் தமிழர்களுக்கு இழைத்த தீங்கு!

அண்டி நின்று, தம் தாகங்கள் தீர சேவைசெய்த இந்தியர்களுக்கு, மொகலாய மன்னர்கள் காஷ்மீர்ப் பள்ளத்தாக்குகளை எச்சிற் பண்டங்களாய் நினைத்து பரிசாய் எறிந்ததுபோல— திரு. கொத்தலாவலைமூலம், இலங்கையின் சிங்கள அரசுக்குத் தமிழர் உயிர்தத நாட்டை, அதற்கே சொந்தம் என்று தில்லி ஒப்பந்தத்தால் நேரு உறுதியாக்கினார்.

### வருத்தத்திற்குரிய தேவை

குடியேறியவர்களைப் பற்றிய 1948-ன் சட்டத்தைத் திருத்தும் வகையில, 1953 பிப், 27-ல நிறைவேறிய மசோதா குறித்து திரு. டட்லி சேனநாயகா பேசுகையில், 'அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பர்மா நாடுகள் வழி காட்டிட, இந்தச் சட்டத்தை மேற்கொளகிறோம். இது வருத்தத்திற்குரிய தேவை (regrettable necessity)' என்று குறிப்பிட்டார். இந்தச் சட்டத்தை, 1953 யூன மாதம இலண்டனில் நடந்த பொதுநலக் கூட்டுறவு நாடுகளின் (Commonwealth) மாநாட்டின்போது, நேரு, சேனநாயகாவிடம் கடுமையாக விமர்சித்து இருந்தார்.

சேனநாயகாவினால் கொடுமையும் வஞ்சனையும் கலந்தது என மறைமுகமாக ஒப்புககொள்ளப்பட்ட அந்தச் சட்டத்தை—ஆஸ்திரேலியா போன்ற நிறவெறி நாடுகள் வழியில் அமைக்கப்பட்டது எனச் சிங்கள அரசே ஒப்புக கொண்ட அந்தச் சட்டத்தை-பரிபூரணமாக செயல்படுத்திக்கொள்ளலாம் என நேருவே பிறகு திரு. கொத்தலாவலையிடம ஒத்துக்கொண்டார்.

### நேருவின் அபய வழி!

இலங்கைக்கு ஏராளமான இந்தியர்கள் நாள் தோறும் பறந்துகொண்டிருக் கின்றார்களாம். அவர்கள் இலங்கையைத் தாயகமாக்கிக கொண்டு, சிங்களவர்கள் வாழ இயலாமல் செய்துவிடுகின்றனராம். இந்தக் கள்ளத்தனமான குடியேற்றம் இலங்கையின் பாதுகாப்பைக்கூட குலைத்துவிடுமாம்! இதனைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு எல்லா வகைகளிலும் பணியாற்றுமாம்!

(Both Governments were "determined to suppress illicit immigration traffic between the two countries'' and would take "all possible steps in close co-operation with each other towards that end")

சிங்கள அரசுக்கு நேருவின் அபயமொழி இது! தேயிலைத் தோட்டங்களில மண்ணோடு மண்ணாகப் புரண்டு சாம்பிய தமிழ்த் தொழிலாளிகள், தில்லி ஒப்பந்தத்தின் இந்த மணிவாசகத்தால், சிறைக் கொட்டடிகளில் உயிர்மூச்சுக்குத் திணறவேண்டி வந்தது.

1954 பிப். 7-ல் இலங்கை இந்தியர் காங்கிரசு (Ceylon indian Congress) தூதுக்குழு ஒன்றை இந்தியாவிற்கு அனுப்பியது தில்லி ஒப்பந்தத்தால் எத்தகைய ஊறுகள் நேரலாம் என்பதை விளக்க வந்த அந்தக் குழுவை, நேரு தில்லியில் சந்திக்கவில்லை. திருவானந்தபுரத்திற்கு வரச் சொல்லி அங்கே சந்தித்தார்! அந்தத் தூதுக்குழு, தில்லி ஒப்பந்தத்தை, 'மனக்கலக்கம்' (perturbation) என்றே வர்ணித்தது. நேரு அந்தத் தூதுக்குழுவைப் பொருட்படுத்தவில்லை. கண்டதற்கெல்லாம் ஆலட்டிக்கொள வாரா, என்ன?

### தன்மயமாக்க...

இலங்கையரால் நியமிக்கப்பட்டிருந்த இலங்கை வரம்பீட்டுக் குழு (Ceylon Delimitation Commisson) 1953 டிச 12ல், தன் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கை, இலங்கை இந்தியர்களுக்கு நாடாளுமன்றத்தில் அதிகப் பிரதிநிதித்துவம் தருவது அவசியம் என்றும், இதுவரை தராமல் இருந்தால் அவர்களுக்குத் தீங்கு நேர்ந்தது என்றும் சொல்லியது. அந்தக் குழுவின் பரிந்துரைகள் சமத்துவக் கோட்பாட்டுக்கு இடம் கொடுத்தன. ஆனால். அக்குழுவின் முடிவுகள், 1954 சன. 18ல் அரசியல் அமைப்புச் சட்டத் தனிப் பிரிவுகள் (The Constitution-Special Provisions) என்ற மசோதாவால் துடைத்தெறியப்பட்டன.

அதே ஆண்டில், சிங்கள அரசால் நிறைவேற்றப்பட்ட, அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதா (பிரிவு 29), பிரதிநிதித்துவத்தையே குறைத்தது. திரு. கொத்தலாவலை, 'இந்தச் சட்டம் எந்த இனத்தவருக்கும் ஊறு செய்வதாகாது. இந்தியத் தோற்றம் கொண்ட குடிமக்களை, மற்ற மக்களோடு கலந்து அவர்கள் மயமாக மாறிட உதவுவதே அதன் நோக்கம்' என்றார்!

> தமிழக அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களை நிறுவனராக கொண்டு வெளிவரும் சென்னை ஏடான 'உரிமை வேட்கை'யில் திரு. செம்பியன் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி எழுதியுள்ள தொடர் கட்டுரையின் ஏழாவது பகுதி இது. —ஆர்.

(it did not seek to impose any disability on any community, but was intended to help the assimilation of citizens of Indian origin so that they might ultimately be absorbed in the rest of the population.)

அதே 1954ல், சிங்கள அரசு, இந்தியர்-பாகிஸ்தானியர் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ மசோதாவை (The Indian and Pakistan Representation Bill) நிறைவேற்றியது; அதனால் இலங்கைத் தமிழர் ஏதோ 'ஒப்புக்காக' பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெற்றார்கள்! நேருவின் அரசும் அந்தச் சட்டத்தை 1954 யூன் 21ல் விமர்சித்து ஓய்ந்தது. 'திரு. கொத்தலாவலையும் யூலை 5ல், 'நேரு இசைந்தார்' என்றே கூறி மகிழ்ந்தார்! தில்லி ஒப்பந்தம் 'புண்ணிய தீர்த்தம்'கூட வழங்காதபோது. இலங்கைத் தமிழர் மன்னார் வளைகுடாவில் நீந்த வேண்டியதுதானே!

இந்தியத் தூதுவராக அவ்வமயம் இருந்த திரு. சி. சி. தேசாய் அவர்கள், இலங்கைத் தமிழர்க்கு ஆதரவாய்த் திகழ்ந்தார். தில்லி ஒப்பந்தத்திற்கு மறைமுக எதிர்ப்பைக்காட்டியதுடன், அந்த ஒப்பந்தத்தைப் பின்பற்றாமல், தன் ஒருதலையான சட்டங்களுக்கு வலிவைக் கூட்டும் இலங்கை அரசைப் பொதுக்கூட்டங்களிலேயே அவர் கண்டித்தார்! துணிவார்ந்த, தமிழர் நெஞ்சம் நேர்ந்த அவரை இதன் காரணமாக, சரியான 'ராஜதந்திரி' அல்ல என்று கூறி, தமது தர்பார் சேவகத்திற்கே அழைத்துக்கொண்டார்!

இலங்கை ஏற்றுக்கொண்டவர் போக, இந்தியாவினால் ஒப்புக்கொண்டோர் போக, எஞ்சியவர்களை — இலட்சக்கணக்கில் உள்ளவர்களை — இந்தியா தான் பொறுப்பேற்க வேண்டியுள்ளது என்றார், திரு. கொத்தலாவலை.

தில்லி ஒப்பந்தத்தை இலங்கைத் தமிழர்ப் பிரச்சினையின் 'நுழைவாயில்' என்று அறிவித்த நேரு, பின் எந்த முயற்சிகளிலும் தீர்வைக் காண ஈடுபடவில்லை.

### மூன்று பரிந்துரைகள்!

இலங்கை அமைச்சரவையின் துணைக் குழு,

- சிங்களவர் அல்லாதோர்க்கு, சந்தேகத்திற்குட்பட்டவர்க்கு, நிரந்தரமான, நிரந்தரமற்ற வீடுகள் இருக்கக் கூடாது என்றும்,
- அத்தகையோர்க்கு அரசு வேலைவாய்ப்பைத் தரக்கூடாது என்றும்,
- அவர்களுக்கு உணவுப் பொருள்களை அரசு விநியோகிக்கக் கூடாது என்றும்,

இலங்கை அரசினைக் கேட்டுக்கொண்டது! இந்தப் பரிந்துரைகள் யோசனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன! இலங்கைத் தமிழரின் உள்ளங்கள் உலைக்களங்களாயின! என்ன பயன்?

திரு. கொத்தலாவல சொல்கிறார்:

'தில்லி ஒப்பந்தம், ஒவ்வொரு இந்தியனையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வெளியேறக் கட்டாயப்படுத்த வழி திறந்துவிட்டுள்ளது. இந்தத் தீவு அடைந்த பயன் அதுவே.'

(forced open a gate through which we can compel every Indian, to a man, to cross over within a given time. This is the benefit that has accrued to the Island by the Delhi pact.) —(தொடரும்)

## எழுது வினைஞர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம்!

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 13வது ஆண்டுப் பொதுக்கூட்டம் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி பன்னிரில் நடைபெறும். அலுவலர் பதவிக்குரிய நியமனப்பத்திரங்கள், பொதுக்கூட்டத்தில் விவாதிப்பதற்குரிய தீர்மானங்கள், அமைப்புவிதித் திருத்தப்பிரேரணைகள் ஆகியவை 19—6—1974 புதன் கிழமை பிற்பகல் 7 மணி வரை பொதுச் செயலாளரால் ஏற்றுக்கொள்ளப் படும்.

நியமனப்பத்திரங்களைச் சங்கப்பணி மனையில் நேரிலோ எழுத்து மூலமோ பெற்றுக்கொள்ளலாம். நியமனப்பத்திரங்கள் நேரில் சேர்க்க விரும்பின் வேட்பாளர்கள், முன் மொழிபவர்கள், வழிமொழிபவர்கள் மட்டுமே நேரில் சேர்க்க வேண்டும மற்றவர்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


6-வது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல்-பிளாசா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ் நகர்)
திரைகளில்

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா,
என். எம். நம்பியார்,
எஸ். ஏ. அசோகன்,
நாகேஷ், மனோரமா,
—நடித்த—



ராமன்தேடிய சீதை
(ஈஸ்மன் கலர்)

கடைசி வாரம்
கிங்ஸ்லி
லிடோ (யாழ்நகர்)
முத்துராமன்,
ஜெயலலிதா,
நடித்த

சூரிய காந்தி

2-வதுமாதம் செல்லமகால்
(கொட்டாஞ்சேனை)
வின்சர் (யாழ் நகர்)
புரட்சி நடிகர்
எம். ஜி. ஆர், ஜெயலலிதா
மனோகர், முத்தையா, நம்பியார், நாகேஷ்
மனோரமா, ராமசாமி, கீதாஞ்சலி, பாரதி

அன்னமிட்ட கை

கெயிட்டி
சிவாஜி, சௌகார்,
ரவிச்சந்திரன், ஜெயலலிதா,
பண்டரிபாய், நாகேஷ், சச்சு,
சுந்தரராஜன், —நடித்த—
மோட்டார் சுந்தரம் பிள்ளை
(புதிய கொப்பி)

வெகு விரைவில்
காதலிக்க வாங்க

8-வது அன்பு வாரம்

சென்ரல் மருதானை 2,6,9-30 ராணி யாழ் நகர் 10.30,2 30,6 30,9.30
(சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்)

இரத்த பாசம் கொண்ட நான்கு சகோதரர்களைப் பற்றிய உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிபூர்வமான கதை. எங்கும் எல்லோரிடத்தும் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட குடும்பக் கதை.

இசை, கதை, நகைச்சுவை அனைத்தும் நிறைந்த அருமையான படம்

ஜெய்சங்கர், ஏ. வி. எம். ராஜன், பிரமீளா,
தேவிகா, சுந்தரராஜன், சோ, மனோரமா, நிர்மலா நடிக்கும்

ஜெயந்தி பிலிம்ஸ்
அன்புச்சகோதரர்கள்
(இலவச பாஸ்கிரதிது)

எமது அடுத்த வெளியீடு
எம். ஜி. ஆர், ஜெயலலிதா 'ஒரு தாய் மக்கள்'
— நடித்த —

அச்சகத்தாரே!
அச்சம் வேண்டாம்!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்ற ஏக்கம் வேண்டாம்

இறக்குமதி அச்சுகளைவிட ஏற்றமிகு அச்சுகளை இங்கேயே வார்த்துக் கொடுக்கின்றோம்

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள் வார்த்துக் கொடுக்கப்படும்

றப்பர் ஸ்டாம்
புளக்
} வேண்டுமா?

விபரங்களுக்கு:-
சுதந்திரன் அச்சு வார்ப்பகம்
194 ஏ, பண்டாரநாயக்கா வீதி, கொழும்பு-12.
தொலைபேசி 23411.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் ஜூன் மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.